# சிலம்புத் தேன்

ந. சஞ்சீவி, எம். ஏ.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❋❋❋

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❋❋❋

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சிலம்புத் தேன்

ந. சஞ்சீவி, எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
பச்சையப்பர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை 1.

விலை ரூ. 1-00

முதற்பதிப்பு :

திருவள்ளுவர் ஆண்டு 1990 சித்திரைத் திங்கள்
(மே, 1959.)

உரிமை ஆசிரியர்க்கே.

## ஆசிரியரின் மற்ற நூல்கள்

**இலக்கியம் :**

சங்ககாலச் சான்றோர்கள்
காற்றிலே மிதந்தவை
சிலப்பதிகார விருந்து
கவிஞர் தரும் காட்சி
உணர்வின் எல்லை

**வரலாறு :**

1806
வீரத்தலைவர் பூலித்தேவர்
மானங்காத்த மருதுபாண்டியர்
மருதிருவர்
வேலூர்ப் புரட்சி
சிவகங்கைச் சிங்கங்கள்
கும்மந்தான் கான்சாகிபு
முதலில் முழங்கிய முரசு
வீரத் தமிழகத்தில் விடுதலை வேள்வி
வெள்ளையர் கண்ட தமிழ் வீரம்
விடுதலை இயக்க வரலாறு
வெள்ளை ஆதிக்க வரலாறு

---

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.

முதற்பதிப்பு:

திருவள்ளுவர் ஆண்டு 1990 சித்திரைத் திங்கள்
(மே, 1959.)

உரிமை ஆசிரியர்க்கே.

## ஆசிரியரின் மற்ற நூல்கள்

**இலக்கியம் :**

சங்ககாலச் சான்றோர்கள்
காற்றிலே மிதந்தவை
சிலப்பதிகார விருந்து
கவிஞர் தரும் காட்சி
உணர்வின் எல்லை

**வரலாறு :**

1806
வீரத்தலைவர் பூலித்தேவர்
மானங்காத்த மருதுபாண்டியர்
மருதிருவர்
வேலூர்ப் புரட்சி
சிவகங்கைச் சிங்கங்கள்
கும்மந்தான் கான்சாகிபு
முதலில் முழங்கிய முரசு
வீரத் தமிழகத்தில் விடுதலை வேள்வி
வெள்ளையர் கண்ட தமிழ் வீரம்
விடுதலை இயக்க வரலாறு
வெள்ளை ஆதிக்க வரலாறு

---

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.

மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர்
## மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்
## அணிந்துரை

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று சிலப்பதிகாரத்தின் சீர்மையைத் தம் பாட்டிடை வைத்துப் பாராட்டினார் புதுமைக் கவிஞர் பாரதியார். ஆயினும், இவ்வுண்மையை ஆய்ந்து அறிந்த அறிஞர் தமிழருள் ஒரு சிலரே என்பது மிகையாகாது. அவ்வொரு சிலருள் 'சிலம்புத்தேன்' தந்த செஞ்சொற் புலவர் ந. சஞ்சீவியும் ஒருவர் என்பதைச் சிலம்புத்தேனைச் சுவைத்தறிவார் இனிதுணர்வர் என்பது ஒருதலை.

பண்டைக் கவிஞர்கள் இயற்றிய பழுதறு காப்பியங்களின் ஏடுகள் பரணகளை விட்டிறங்கிக் கற்றார்க்குக் காட்சியளிக்கச் செய்த பெருமக்கள் என்றும் அறிஞர் பாராட்டுக்கு உரியவர்கள் என்பதில் ஐயமின்று; அக்காப்பியங்களின் சுவையைத் தாம் கண்டறிந்த அளவு பிறரும் கண்டு களிக்கச் செய்த நல்லுபகாரிகள் உரையாசிரியர்கள்; அவ்வுரை நுட்பங்களை உள்ளவாறுணர்ந்து தம் சொல்லாலும் எழுத்தாலும் அக்காப்பியங்களின் சிறப்பியல்புகளைப் பொதுமக்களும் ஓரளவு உணர்ந்து அவற்றில் ஈடுபடச் செய்து வந்த—செய்து வரும்—சிறப்புடைத் தொண்டர் அனைவரும் தமிழ் நாட்டினர் பாராட்டுக்குரியவராவர்.

அறிஞர் ந. சஞ்சீவியவர்கள் சிலப்பதிகாரத்தைப் பல கோணங்களில் நின்று ஆராய்ந்து கண்ட அரிய கருத்துக்களைச் 'சிலம்புத்தேன்' என்னும் சிறிய நூல் வாயிலாக யாப்பறி புலவர்க்கு நீப்பரு விருந்தினைச் செய்துள்ளனர். 'நல்விருந்தருந்தி நனி மகிழ வம்மின்' எனக் காப்பியக் 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'களை இவ்வணிந்துரை வாயிலாக அழைக்கின்றேன்.

சஞ்சீவியவர்களது செஞ்சொல் முயற்சி நாளும் சிறந்து நாட்டுக்கும் மொழிக்கும் நலம் விளைப்பதாக!

சென்னை
12—5—'59.

**மே. வீ. வே. பிள்ளை.**

# முன்னுரை

காவிய உலகில் சிலம்புத்தேன் சிலம்புத் தேனே. இவ்வுண்மையை உணர்ந்தே போலும் கவிமணி தேசிக விநாயகர்,

‘தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி உணர்ந்தின் புறுவோமே!

என்று கசிந்துருகிப் பாடினர். இவ்வுண்மையை யானும் உணர்ந்து போற்றும் ஒளி நெறியில் உருவாகிய மூன்று கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இத்தொகுப்பில் உள்ள முதல் கட்டுரை எனது தலைமையில் கொண்டாடப் பெற்ற தாளுத் தமிழ்ச் சங்க முதலாண்டு விழா (1958) மலரில் முகிழ்த்தது. இரண்டாவது கட்டுரை புதுவை இராமகிருஷ்ண வாசக சாலையாரின் வெள்ளி விழா (1958) மலரில் விரிந்தது. மூன்ருவது கட்டுரையின் முற்பகுதி சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் நடத்தும் ‘செங்கோல்’ இதழின் 1957-ஆம் ஆண்டு இளங்கோ மலரில் மலர்ந்தது.

‘சிலம்புத்தேன்’ செந்தமிழர் சிந்தைக்கு விருந்தாகும் இச்சமயத்தில் எனது சிலப்பதிகார ஆர்வத்தை நாளும் வளர்த்து வரும் பெரியோர் கட்கும் நண்பர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘சிலம்புத்தேன்’ சிந்தாமணிச் செல்வர் வாழ்த்தோடு வெளி வருவது யான் செய்த பெரும்பேறு. அச்சாகுங் காலத்து இந்நூலைச் செப்பம் செய்து உதவியதோடன்றி, எனது வருங்கால வாழ்வில் பெருங்கருணை கொண்டு இந்நூலுக்கு அரியதோர் அணிந்துரையும் வழங்கி எளியேனை வாழ்த்தியருளியுள்ள மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் மலரடிகளை என்றும் மறவேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழ்க சிலம்புத்தேன்!

கச்சியம்பதி,
14-5-59.

ந. சஞ்சீவி

*சென்னைப் பச்சையப்பர் கல்லூரியில்*
*செந்தமிழ் வளர்க்கும் பேராசிரியராய்*
*சிறப்புடன் விளங்கிய செம்மல்*

**மோசூர் கந்தசாமி முதலியார் அவர்கட்கு**

# உள்ளுறை

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சிலம்பின் சிறப்பு | ... | 1 |
| 2. | சிலம்பின் குறிக்கோள் | ... | 17 |
| 3. | சிலம்பின் புகழ் | ... | 40 |

# 1

# சிலம்பின் சிறப்பு

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று நினைத்தாலே நம் மேனி சிலிர்க்கும்; மனம் குளிரும்; தோள்கள் வீங்கும்; துயரங்கள் நீங்கும். உணர்வின் கடலாய்—ஒழுக்கத்தின் இமயமாய்—வாழ்ந்த ஒரு பெருந்தமிழ் மகனார்— புவியரசாள்வதிலும் கவியரசாள்வதே அழியாப் பெருமையும் பயனும் அளிக்கவல்லது என்று கருதிய அறவோர்—செய்தளித்த பாகு தமிழ்க் காவியமன்றோ சிலப்பதிகாரம்? கலையின் இனிமையை — கற்பின் திண்மையை — வீரத்தின் ஆற்றலை விளக்க எழுந்த தமிழ்ப் பேரிலக்கியம் அன்றோ சிலம்புச் செல்வம்? இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாக இடையறாத இலக்கிய வளம் செறிந்து விளங்கும் நம் இன்பத் தமிழ் மொழி கண்ட முதற்பெருந்தேசிய காவியம் அன்றோ சித்திரச் சிலப்பதிகாரம்? ஆம்! அதனாலேதான் அப்பெருங்காப்பியத்தைப் படிக்குந்தோறும் நம் வாய் இனிக்கிறது; மனம் இனிக்கிறது; வாழ்க்கையே இனிக்கிறது.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் இன்பத் தமிழகம் இருந்த ஏற்றத்தினைக் காவிய வடிவிலே எடுத்துக்காட்டும் பெருமை, சிலப்பதிகாரத்தின்

தனி உரிமை. சிலப்பதிகாரம் வரலாற்று உணர்ச்சி படைத்த வல்லாளர்களுக்குத் தோண்டத் தோண்டத் தொலையாத பொன்னும் மணியும் தரும் தொன்மைச் சுரங்கம்; கலையுணர்ச்சியும், இலக்கியத் திறமையும், ஆற்றலும் கொண்டார்க்கு மூழ்கி எடுக்க எடுக்கக் குறையாத முத்து வளம்—கருத்து வளம்—கொழிக்கும் காவியக் கடல்; வையத்து வாழ்வாங்கு வாழ விரும்புவார்க்கு ஒளியும் நெறியும் காட்டும் ஒப்பற்ற கலங்கரை விளக்கம். இத்தகைய பெருமை வாய்ந்த சிலப்பதிகார உலகில் நுழைந்துவிட்டால், **இளங்கோ அடிகள்** நம் ஒவ்வொருவரின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப அருள் கூர்ந்து படைத்து அன்பு கூர்ந்து ஊட்டும் அமிழ்தினும் இனிய தமிழ் விருந்தின்—ஒன்பான் சுவையும் ஒருங்கே பொருந்திய இலக்கிய விருந்தின்—இன்பத்தையும் பயனையும் அளந்துரைக்க வல்லார் யார்?

> 'சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
> சிலப்பதி காரம் என்னும் பெயரால்
> நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'
>
> —பதிகம், 58—60

என உறுதி கொண்டு இளங்கோ அடிகள் படைத்த இலக்கிய உலகில் நாம் காணாத காட்சியில்லை; கேளாத கீதமில்லை; முகராத வாசமில்லை; சுவையாத பொருளில்லை; உற்றறியாத உணர்வில்லை. கனவே போலும் கனவுலகில்

நாம் காணும் இன்பங்கள் அத்தனையும் இளங்கோவின் காவிய உலகில் பெறலாம்; பெற்றுக் களிக்கலாம்.

அதில், [1]'படைப்புக் காலம் தொட்டு'த் தமிழகத்தைப் பழுதின்றி ஆண்டு வந்த மூவேந்தர் குடியும் செம்மாந்து சிறந்து விளங்கும். சோழநாட்டின் புலிக்கொடியும், பாண்டி நாட்டின் மீனக் கொடியும், சேரநாட்டின் விற்கொடியும் தமிழகமெங்கும் தலை நிமிர்ந்து பட்டொளி வீசிப் பறக்கும். நெல்லின் வளமும் கலையின் வாழ்வும் நிறைந்து கிடக்கும் சோழ வளநாட்டில். முத்தின் வளமும் நீதியின் திறனும் முதிர்ந்து திகழும் பாண்டி நாட்டில். வேழத்தின் வளமும் வில்லின் ஆற்றலும் செறிந்து விளங்கும் சேரநாட்டில். புகாரின் பெருமையை-மதுரையின் மாண்பை—வஞ்சியின் வளனை அதில் கண்ணாரக் காணலாம். தமிழகத்தின் தலைநகர்களில்—துறைமுகவாயில்களில்—நத்தி நம் பொருள் பெறுதற்கு யவனர் முதல் காசினி வணிகர் யாவரும் வந்து காத்திருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாய்த் திகழும்.

சிலப்பதிகார உலகில் முடிவேந்தர் மூவரின் செங்கோல் ஆட்சியால் தமிழகம் மூன்றாகப் பிளவுபட்டுக் கிடந்தாலும், செந்தமிழின் ஆட்சியால் ஒன்றாக ஒற்றுமைப்பட்டிருந்த ஒப்பற்ற காட்சியைக் கண்டு உவகை கொள்ளலாம். வேந்தரால் பிளவுபட்டுக் கிடந்த தமிழகத்தின்

ஒருமைப்பாட்டைக் கண்ணகியின் வீரச் சிலம்பால் உலகறிய—தமிழன் உள்ளமறியச் செய்யும் இளங்கோவின் இதயத் துடிப்பைக் காணலாம்; கேட்கலாம்.

உழவரோதை, விழவரோதை சிறந்தார்க்க, சோழவளநாட்டைக் காத்து நடந்து செல்லும் காவேரித் தாயை வாழ்த்தி வணங்கலாம்; புலவர் நாவில் பொருந்திய பூங்கொடியை—வையையெனும் பொய்யாக் குலக்கொடியைக்—கோவலனும் கண்ணகியும் கண்டு கை தொழுது மதுரைக்குச் செல்லும் காட்சியைப் பார்த்து மனமுருகிக் கண்ணீர் சிந்தலாம். ஆரமும் அகிலும் உருட்டி ஆர்வம் கொண்டு பாய்ந்து வரும் பேரியாற்றின் கரையில் வஞ்சிநாட்டு வேந்தனது வீரமுரசொலி கேட்டு விம்மிதம் கொள்ளலாம். இந்திர விழா–கடலாடு விழா–இத்தகைய பழந்தமிழ்த் திருவிழாக்களைக்–கலை விழாக்களைக்—கண்டு களிவெறி கொள்ளலாம். மாதவி பாடிய கானல் வரியைக் கேட்கலாம். அதன் விளைவாக வடநாட்டு வேந்தர்-நாவடக்கம் இன்றித் தமிழ் மன்னரைப் பழித்த கனக விசயர்—முடித்தலை நெறிந்த முழக்கத்தைக் கேட்கலாம்.

உயர்ந்து விளங்கும் இமயமும், விரிந்து கிடக்கும் விந்தியமும், வீங்குநீர் அருவி வேங்கடமும், பரந்து கிடக்கும் நீலகிரியும், பைந் தமிழ் வளரும் பொதிகையும், தென்னவன்

புகழ் கூறும் சிறுமலையும் நம் கண் முன்னே தோன்றும்; இந்தியாவின் இன்பத் தமிழகத்தின் பெருமையை எடுத்துப் பேசும்.

ஆம்பலும் தாமரையும், முல்லையும் இருள்வாசியும், காந்தளும் கடம்பும், சண்பகமும் பித்திகையும் மொட்டவிழ்ந்து முகிழ் நகை பூத்து நறுமணம் கமழும். மதுரைத் தென்றலும் புலவர் நாவில் பொருந்திய பொதிகைத் தென்றலும் மெல்லென வீசி நம் மெய் சிலிர்க்கச் செய்யும்; 'இன்பத் தமிழுக்கு ஓர் உவமை ஆகேனோ?' என்று நம்மிடம் வந்து கெஞ்சாமல் கெஞ்சும்.

சோழனது செங்கோல் — பாண்டியனது நீதி—சேரனது வீரம் இவற்றை எல்லாம் நேரில் காணலாம். பழந்தமிழகத்தின் அரசரைக் காணலாம்; வணிகர்களைப் பார்க்கலாம்; வீரர்களைச் சந்திக்கலாம்; அந்தணர்களை அறிமுகம் செய்துகொள்ளலாம்; குறவர்களோடு குலாவலாம்; வேடர்களோடு ஆடலாம்; ஆயர்களோடு பாடலாம்; மன்னர்களையும் கண்டு மகிழலாம்; மக்களோடும் பழகிப் பழகி இன்புறலாம்.

சிலப்பதிகார உலகில் கலையரசி மாதவியின் சிறந்த நடனத்தைக் காணலாம்; அது நம் கண்களைக் கவரும். கவுந்தி அடிகளின் கருணையை உணரலாம்; அது நம் கருத்தை உருக்கும். மாடல மறையோன் அறிவுரையைக் கேட்கலாம்;

அது நம் அறிவை அள்ளும். மாநாய்கன், மாசாத்துவான், வயந்தமாலை, கோசிகமாணி, மாதரி, ஐயை, தேவந்தி, சாலினி, கோப்பெருந் தேவி, இருங்கோ வேண்மாள், அழும்பில் வேள், வில்லவன் கோதை, இவர்களை எல்லாம் நாம் சந்திக்கலாம். இவர்கள் வாழ்வும் வரலாறும் நம் சிந்தனையைத் தேனுக்கும். பொற் கொல்லன், கல்லாக்களிமகன், வம்பப்பரத்தர் ஆகிய இவர்களையும் நாம் சந்திக்கலாம். இவர்கள் சொல்லும் செயலும் நம் சிந்தனையைச் தீயாக்கும். மன்றங்களை, பூதங்களை, பல்வேறு தெய்வங்களைக் காணலாம்; அவை பேசும் பேச்சுக்களைக் கேட்கலாம்; கேட்டுச் சிலை போல மெய்ம்மறந்து நிற்கலாம்.

கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியில் —நள்ளிரவில் — பால் நிலவில் — நடக்கலாம். 'மதுரை மூதூர் யாங்குளது?' என்று கேட்ட வண்ணம் கால் அயர்ந்து மனம் அயர்ந்து நடக்கும் கண்ணகித் தெய்வத்தின் திருக்கரத்தை அன்போடும் ஆறாத் துயரோடும் தன் தோள் மேல் கிடத்தி 'உயிரினும் மானம் பெரிது' என்று கொண்ட கொள்கை விடாது நடந்து செல்லும் காதற்கோவலனை எட்டியிருந்து காணலாம்; கண்டு கைபிசைந்து கண் பிசைந்து கலங்கு துயர் எய்தி மண் மகளுக்கு நம் கண்ணீரைக் காணிக்கையாக்கலாம்.

காடும் மேடும் கடந்த பின் நாடும ஊரும நம்மை வரவேற்கும். அங்கு 'நாளங்காடி'யில்

(பகல் கடைத் தெருவில்) சுற்றலாம்; 'அல்லங் காடி'யில் (இரவு கடைத் தெருவில்) திரியலாம். கிரேக்கர்களோடு கூடி, ரோமர்களோடு பேசி மகிழலாம்; சர்வதேசிய மணம் கமழும் தமிழ் நாட்டுத் தலைநகர்களில் இரண்டாம் நூற்றாண்டு நாகரிகத் தமிழனாகத் தலை நிமிர்ந்து வாழலாம்.

வேங்கடத்தில் உறையும் வியன்பெருந் தெய்வத்தையும், குமரியில் கோயில் கொண்ட கன்னி அன்னையையும், திருவரங்கத்தில் பாயல் கொண்ட பெருமானையும், ஆடக மாடத்தில் அறிதுயில் கொண்டோனையும், எவர்க்கும் வணங்காத முடியால் வணங்கிச் செங்குட்டுவன் வலங்கொண்ட செஞ்சடைக் கடவுளையும் கண்டு களி கூரலாம்; பல்வேறு சமயங்களும் நிறைந்த பழந்தமிழ் நாட்டில் ஓடிப் பாய்ந்த சமரச ஆற்றில் நீராடி உள்ளம் குளிரலாம்; அருமைத் தமிழகம் எங்கணும் நிறைந்திருந்த இயற்கையின் அழகையும், செயற்கையின் திறனையும், கலையின் வளத்தையும், கல்வியின் பெருக்கையும், வாணிபத்தின் செழிப்பையும் அறிந்து வியக்கலாம்.

சுருங்கச் சொன்னால், எல்லா வகையிலும் உலக நாகரிகங்களுக்கு ஓர் இமயமாய் விளங்கிய இன்பத் தமிழகத்தை—நிலத் தொடர்பால் அதோடு சேர்ந்து நிற்கும் நாவலந்தீவின் வட பகுதியை—அதை ஆண்ட கணக்கற்ற வடநாட்டு மன்னரை—அவர் தமிழ் வேந்தர் தாள் போற்றிய திறனை எல்லாம் அறியலாம். அது மட்டுமோ?

இந்தியாவினின்றும் பிரிந்து கிடக்கும் கடல் சூழ் இலங்கை வேந்தன் கயவாகு, வீரக் கண்ணகிக்குச் சேர வேந்தன் இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி எழுப்பிய கோயிலின் தலைவாயிலில் நின்று முடி தாழ்த்தி அடி பணியும் காட்சியைக் கண்டு உடல் உயிராகலாம்.

இமயம் தந்த கல், கங்கை தந்த தூய்மை, தமிழன் காட்டிய வீரம் இத்தனையும் கலந்து எழுந்த அக்கண்ணகியின் கோயிலில் நித்தமும் விழாவும் பூசனையும் வழுவாது நடைபெறும். அவை யாவும் ஏற்றுக்கொண்டு அமைதிக் கோலத்தோடு எழுந்தருளியுள்ள பத்தினித் தெய்வத்தைப் பாருலகம் முழுதும் வழிபடும் பான்மை கண்டு புத்துணர்வும் புது வாழ்வும் கொள்ளலாம்; 'அன்னையே, விற்பிடித்த சேரன் எழுப்பிய கற்கோயிலில் வாழும் நீ, எங்கள் மனக் கோயிலிலும் எழுந்தருள்க!' என்று தழுதழுக்கும் குரலில் தலைமேல் கரம் கூப்பித் தாள் பணிந்து வேண்டலாம்.

கலை நம்பி கோவலனுக்கும் காதல் நங்கை கண்ணகிக்கும் நடைபெற்ற திருமண விழாவில் கேட்கும் மங்கல வாழ்த்தோடு சிலப்பதிகாரம் தொடங்குகிறது; வரந்தரும் காட்சியோடு முடிகிறது. மங்கல வாழ்த்திற்கும் சேர நாட்டு வீர வேந்தன் செங்குட்டுவன், கற்புக்கரசி கண்ணகிக்கு எடுத்த கோயிலில் மல்லன் மாஞாலம் முழுவதும் உய்ய—ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாபத்தினி—கண்ணகித் தெய்வம்—

வரம் தரும் காட்சிக்கும் இடையே கிடக்கும் பெருவரலாற்றை முப்பது காதைகளில்—மூன்று காண்டங்களில்—சிலப்பதிகார விருந்தாக வாரி வழங்குகிறார் இளங்கோ அடிகள். தூயோராகிய இளங்கோ அடிகள் அளிக்கும் அத்தகைய விருந்திற்கு நிகரான விருந்தினைக் காளிதாசனும், ஷேக்ஸ்பியரும், தாந்தேயும், வர்ஜிலுங்கூட அளிக்கவில்லை என்று அறிஞர் உலகம் — ஆராய்ச்சியாளர் உலகம் — கூறிப் பெருமிதம் கொள்கிறது. அவ்வாறானால், நம் தமிழன்னை மணி வயிறு குளிரப் பிறந்த தவ முனிவராகிய இளங்கோ அடிகள் அளிக்கும் அவ்விலக்கிய விருந்தினை, 'அவர் பிறந்த தமிழ்க் குடியிலேயே நாங்களும் பிறந்தவர்கள்; அவர் போற்றி வளர்த்த தமிழ் மொழியே எங்கள் உயிரினுமினிய தாய் மொழி,' என்று உரிமை கலந்த பெருமையோடு கூறி, உண்டு மகிழக் கொடுத்து வைத்த தமிழர்களாகிய நாம் எவ்வளவு பேறு பெற்றவர்கள்!

சேரர் செய்த சிலப்பதிகாரம் 'பழுதற்ற முத்தமிழின் பாடல்'[2] என்பது சாலப் பொருந்தும். இயற்றமிழின் இன்பமும், இசைத் தமிழின் அருமையும், நாடகத் தமிழின் நலமும் சேரப்பொருந்தி முற்றும் தமிழ் மணமே கமழும் ஒரு காப்பியத்தை முதற்காப்பியமாகப் பெற்ற பெருமை நம் மொழியின்—இலக்கியத்தின்—வரலாற்றின்—தனிச் சிறப்பன்றோ?

'கரும்பும் இளநீரும் கட்டிக்கனியும்'[3] போலத்தித்திக்கும் சுவைக்காவியமாம் சிலப்பதிகாரத்திற்கு எத்தனையோ சிறப்புக்கள் உண்டு—உலக இலக்கியக்கூடத்திலும், தமிழ் இலக்கிய அரங்கிலும். அவற்றுள் தலையாய பெருமைகள் இரண்டு: ஒன்று, சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமாய் — மக்கள் இலக்கியமாயிருப்பது. இது உலக இலக்கியங்களுக்கு இடையே சிலம்பிற்குள்ள தனிப்பெருஞ்சிறப்பு. மற்றொன்று, தமிழ் இலக்கிய வரலாற்றிற்கே — வளர்ச்சி நெறிக்கே—ஒரு திருப்பு மையமாய் விளங்கும் பெருமை. இவ்விரு பெருமைகளும் சிலப்பதிகாரத்திற்குக் காலக் கடவுளும் கவிதைத் தெய்வமும் தந்த இணையில்லாத இரு புகழ்ப் பரிசுகளாகும்.

பாரத நாட்டின் பழம்பேரிலக்கியங்களையும் ஐரோப்பிய நாட்டு ஆதி காவியங்களையும் செல்வச் சிலப்பதிகாரத்தோடு ஒப்பிட்டுச் சீர் தூக்கிப் பார்க்கும் எவர்க்கும் இந்த உண்மை விளங்காமல் போகாது. வடமொழியின் ஆதிகாவியம் வேந்தர்கள் புகழையும் வீரத்தையும் விதந்தோதும்—தேவாதி தேவர்களின் திருவிளையாடல்களுக்குப் புகழ்மாலை சூட்டும்—வான்மீகி இராமாயணமே ஆகும். கிரேக்கர்களின் பழம் பெருங்காப்பியம் ஹோமர் பாடிய 'இலியது' என்பதே ஆகும். மெனலஸ் என்ற பேரரசன் அழகு மனைவி ஹெலனைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறைபிடித்தலால் மூண்ட 'இரா

மாயணமே' அப்பழங்காவியம். வர்ஜில் என்ற பாவாணர் பாடிய 'ஈனிது' என்பதே இறந்து போன இலத்தீன் மொழியின் பழமைக் காப்பியம். உரோமப் பேரரசினைத் தோற்றுவித்த 'ஈனியஸ்' என்ற அரசர் பெருமானது வரலாற்றுப் புகழ் பாடும் பெருமையே அக்காப்பியத்தின் பெருமை. இவ்வாறு எந்த நாட்டுப் பழங் காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அது முடி சார்ந்த மன்னரின் பழம் பெருமை பாடும் 'புராண'மாகவே காட்சியளிக்கிறது. ஆனால், முடிமன்னர் இசைபாடும் அக்காவியக் குவியல்களுக்கு இடையே தமிழ் மக்களின் முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரமோ, மக்கள் புகழ் பேசும் குடிமக்கள் காப்பியமாய் ஒளிர்கிறது.[4]

சிலப்பதிகாரக் காவியத்தின் தலைவர் யார்? சோழனா? பாண்டியனா? சேரனா? இவர்களுள் எவரும் அல்லர். வீரக் கண்ணகியும் அவள் காதல் கணவன் கோவலனுமே அக்காவியத்தின் தலைவர். இளங்கோ அடிகள் காவியம் இயற்றியது சோழனது செங்கோலின் பெருமை பேசவா? பாண்டியனது வெண்கொற்றக் குடையின் புகழ் விளக்கவா? சேரன் ஏந்திய வீரவில்லின் ஆற்றலைக் கூறவா? ஆம்; இவையனைத்திற்கும் சிலப்பதிகாரத்தில் இடம் உண்டு. ஆனால், இளங்கோவின் இதயம்—காவியத்தின் கருப்பொருள் — கண்ணகியின் காற்சிலம்பின் வரலாற்றை — ஆற்றலை—வையகம் அறியச் செய்வதே. இளங்கோ அடிகள் படைத்த

இலக்கிய விண்ணில் பால் ஒளி பரப்பும் அழகு நிலா, கண்ணகிக் கடவுளே. கரிகால் வளவன்—நீதி மன்னன் நெடுஞ்செழியன்—சேரன் செங்குட்டுவன் இவர் யாவரும் அவ்வெண்மதியத்தின் அழகிற்கு உறுதுணை புரிந்து நிற்கும் உடுக்களே.

‘ஆர்புனை சென்னி அரசர்க் களித்து,
செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலம் காவல் மன்னவற் களித்து,
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கோற்றவற் களித்து’

— நடுகற்காதை, 211—217.

பெருமை செய்த கண்ணகியின் வரலாறன்றோ சேரர் தரும் சிலப்பதிகாரம்? ஆம்! கற்பரசி கண்ணகியின் வரலாற்றின் தொடர்பில்லையேல் சிலப்பதிகாரத்தில் வரும் சேர சோழ பாண்டியர் பெருமை எல்லாம் நிலவில்லா வானத்தில் தோன்றிய விண் மீன்களின் நிலைதானே? எனவே, உலகாளும் தமிழ் மன்னரெல்லாரும் அரசர் குடியில் பிறவாத ஒரு தமிழ் மகளின் கற்பின் மாண்பை விளக்கச் செங்கோல் ஓச்சியும்—உயிரினைத் துறந்தும்—ஒன்னார் முடித்தலை நெருக்கியும்-பணிபுரிவதை விளக்கும் இளங்கோவின் இலக்கியம் தலை சிறந்த குடிமக்கள் காப்பியம் அன்றோ? உலகில் தோன்றிய ஆதி காவியங்கள் யாவும் கோவேந்தர்களின்

குடியின் பெருமையையும் கோலின் பெருமையையுமே கூறிக்கொண்டிருக்கத் தமிழ் மக்களின் தலை நாள் காப்பியம் மட்டும்,

'பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையும்!'
—வஞ்சினமாலை, 36—37.

என்று அல்வழிப்பட்ட அரசனை அழிப்பதே அறநெஞ்சு படைத்த மறப்பெண்டிர் கடமை என்று விளக்கிக் காட்டும் வரலாறாய்—தேசிய உணர்வு பொங்கி எழும் மக்கள் இலக்கியமாய்—இருத்தல் இளங்கோ அடிகள் நம் மொழிக்கும் இனத்திற்கும் செய்த பெருமையினும் பெருமை அன்றோ?

அடுத்த நிலையில் ஆராயும்போது இளங்கோ அடிகள் காவியத்தால் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கே நேர்ந்துள்ள மாறுதல், எண்ணுவார் இதயத்தை இன்பக் கடலாடச் செய்யும். சிலப்பதிகாரம் தோன்றும் வரை தமிழ் இலக்கியம் வளர்ந்திருந்த முறை வேறு; அதற்குப் பின் தமிழ் இலக்கியம் வளர்ந்த வகை வேறு. சிலப்பதிகாரம் தோன்றுவதற்கு முன்னர்—சங்க காலத் தமிழ் இலக்கியம் தனிநிலைச் செய்யுட்களை மட்டுமே பெற்றிருந்தது. உலகம் கண்டிராத அளவு உள்ளத்தின் உயர்வும் எண்ணிக்கையும் படைத்திருந்த சங்கத் தமிழ்ப் புலவர் கணக்கற்ற தமிழ் மலர்களை-இன்பத் தேன் சிந்தும் இலக்கிய மலர்களைத்—தமிழ்த்தாயின் சீ

வடிகளில் வைத்து வழிபாடு ஆற்றினர். ஆனால், ஒன்ருகத் தொடுக்கப் பெறுமல் தனித்தனியாய் இருந்த காரணத்தால் அத்தீஞ்சுவை மலர் களுள் எத்தனையோ நறுமணப் பூக்களைத் தமிழ் மக்கள் காலம் என்னும் கடுங்காற்று வாரிச் செல்லவிட்டுவிட்டார்கள். இக்குறையை முதன்முதல் உணர்ந்த தமிழ் நெஞ்சம் இளங்கோ அடிகளின் இலக்கிய நெஞ்சம்.[5] அவர், தமிழ் அன்னைக்குத் தமிழ்ப் புலவோர் ஆற்றும் தொண்டு கால அலைகளையும் வென்று வாழ வேண்டுமானல், உதிர்ந்த மலர்களால் அவள் திருவடிகளை வழிபடும் வழிபாட்டைவிடத் தமிழ் மலர்களால் தொடுத்த இலக்கிய மாலை சூட்டி அவளை வழிபடுவதே சாலச் சிறந்த பயன் தருவது என்று கருதினர். அவ்வாறு அவர் கருதிய கருத்தின் உருவமே சிலப்பதி காரம். அவ்வாறு அவர் எண்ணிய எண்ணத் தின் வெற்றியே இன்று நாம் காணும் எத்தனையோ தமிழ்ப்பெருங்காவியங்கள்! ஆம்! தமிழிலக்கிய வளர்ச்சிக்கே ஒரு புது நெறி கண்ட புரட்சிப் புலவர் இளங்கோ அடிகள். அவர் காட்டிய நெறியின் விளைவுதான்— தமிழ்த் தாய்க்குக் காவியக் கோவில் கட்டி இலக்கிய விருந்து படைத்து வழிபாடாற்ற அவர் தொடங்கிய முயற்சியின் வெற்றிதான்— இன்றைய தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் அடிப்படை.

இளங்கோ அடிகள் வழி காட்டினர்; பின் வந்த புலவர்கள் அவர் காட்டிய நல்வழியை மகிழ்ச்சியோடும் வெற்றியோடும் பின்பற்றினர்கள். சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் பூண்ட தமிழ்த் தாயின் மார்பில் மேலும் பல பாமாலைகள் அணி செய்தன. அவள் அழகும் ஒளியும் முன்னிலும் பன்மடங்கு சிறப்புடையனவாயின.

இப்படிப்பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னாட்டிற்கும் பல்லாற்றானும் பெருமை தேடித் தந்த பெரியோரின்—இளங்கோ அடிகளின்—புகழ் நற்றவ வானினும் நனி பெரிது! அத் தகைய அண்ணலின் புகழைப்பாட அமரகவி பாரதியாரினும் தலை சிறந்த கவிஞர் நம் நூற்றாண்டில் வேறு யார்?

'யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை, உண்மைவெறும்
புகழ்ச்சி இல்லை.'[6]

என்பது தேசிய கவிஞர் பாரதியாரின் பாட்டு. பாரதியார் போற்றிய மூவருள்ளும் தனிச் சிறப்பு வாய்ந்த தமிழ்க் கவிஞர் இளங்கோ அடிகள். அவர் தரும் தமிழ் விருந்து—சிலப் பதிகாரப் பெருவிருந்து—ஏனைய விருந்துகள்

போலல்லாது நம் ஊனினைச் சுருக்கும்; உள்ளொளி பெருக்கும்; நம் சிந்தனையைச் — சொல்லை — செயலை — இறவாப் புகழுடையன வாக்கும்.

# 2

# சிலம்பின் குறிக்கோள்

‘தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே!’ 7

என்று மனமுருகிப் பாடினர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. செஞ்சொற் காப்பியமாம் சிலப்பதிகாரம் ‘தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை’ நிறைந்து விளங்குகிறதாம்! அதை ஊனிலே உயிர் உள்ளளவும் ஓதி உணர்ந்து இன்புற வேண்டுமாம்! என்னே கவிமணியின் தமிழ்க் காதல்! பாட்டுக்கொரு புலவராகிய பாரதியாரும் அவரது பாட்டைக் கேட்டு மகிழ்ந்த கிறுகிறுப்பில் எத்தனையோ அமுதத் தமிழ்க் கவிதைகளை அள்ளி வழங்கிய கவிமணியும் நாவார மனமாரப் போற்றிய சிலப்பதிகாரத்தின்—தமிழ் இனம் கண்ட தலைசிறந்த தேசிய காவியத்தின்—முற்றத் துறந்த முனிவராகிய இளங்கோ அடிகள் செய்தருளிய அவ்விணையில்லா இலக்கியத்தின்—உயிர் நாடியான குறிக்கோள் எது எனக் காண்பது பொருத்தமும் பயனும் உடையது அன்றோ?

பல்சுவையும் மலிந்து கிடக்கும் செல்வக் களஞ்சியமான சிலப்பதிகாரம் நமக்கும் வையகத்திற்கும் தெரிவிக்கும் செய்திகள் பலப்பல. அவற்றுள் எல்லாம் தலையாய செய்திகள் யாவை? அவற்றிற்கெல்லாம் உயிர் நாடியாய் விளங்கும் குறிக்கோள் யாது? கடவுள் தத்துவம் போலக் காவிய உலகினுள் மறைந்து கிடக்கும் அந்த ஒப்பற்ற உயிர்த் தத்துவம்—இலட்சியத் தத்துவம்—எது?

இவ்வினாவிற்கு விடை காண இளங்கோ அடிகளின் இலக்கியத்தைக் காவியத்தின் குறிக்கோளைத் தேடும் கண்ணோட்டத்தோடு காண வேண்டும். அதோடு ஓங்கி உயர்ந்த மாடத்தின் அழகை மேலும் ஒருபடி சிறப்பித்துக் காட்டும் சித்திரம் போல—பரந்து விரிந்து கிடக்கும் மாநகரின் பெருமையையும் பெருமிதத்தையும் உலகறியக்காட்ட உயர்ந்து நிற்கும் கோபுரம் போல—மேடையேறி மின்னற் கொடியென ஆடும் மங்கையின், 'அழகுக்கு அழகு' செய்யும் ஆபரணம் போல, சிலப்பதிகாரத்திற்கு அணிந்துரையாய் விளங்கும் பதிகத்தையும் ஊடுருவிப் பார்க்க வேண்டும்.

குமரி முதல் இமயம் வரை ஒருமொழி வைத்தாண்ட செந்தமிழ் நாட்டு வேந்தன்—சேரமன்னன் — இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். அவன் ஈன்ற அருமைப் புதல்வர் இருவர். அவருள் மூத்தவன் சேரன் செங்குட்டுவன்; இளையவர்

இளங்கோ அடிகள். பெரும்புகழ் வேந்தனுக்கு அருமந்த மைந்தராய்ப் பிறந்த இளங்கோ, துவரத் துறந்த தூயோராய்—தமிழ் மரபிற்கு மாறுபட்டு வாழ்வதிலும் அரசாள் செல்வத்தை அக்கணமே உதறி எறிந்து அடிகளாய் வாழ்வதே அறம் எனக் கருதிய அண்ணல். அவ்வாறு அவர் கருத—அரண்மனை வாழ்வை விட்டு விலக—மன்னவன் கோயிலை மறந்து குணவாயிற்கோட்டத்திற் குடிகொள்ளக் காரணம் யாது? அதை இளங்கோ அடிகளே கூறுகிறார். ஆம். ஐயாயிரத்தோரடிகள் கொண்ட பெருங்காவியத்தில் வேறு எங்கும் தம்மைப் பற்றி எதுவும் பேசாத அப்பெருமகனார், தம் சுயசரிதத்தைக் காவியத்தின் முடிவில் சேர வேந்தன் கட்டிய கோயிலில் எழுந்தருளியிருந்த பத்தினித் தெய்வமாம் கண்ணகியே தேவந்தி மேல் தோன்றித் தம்மைப் பார்த்துக் கூறியதாகக் கூறுகிறார். சிலப்பதிகாரக் காவியத்தில் இளங்கோ கூறும் சுயசரிதமாக அமைந்துள்ள அப்பகுதி, படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுதம் ஆகும்:

'உலக மன்னவரெலலாரும் தன்னடி போற்றி வணங்க, கனகவிசயர் முடித்தலை நெரித்த சேரன் செங்குட்டுவன், மாடலமறையோன் கூறிய அறிவுரை கேட்டு, அவனோடு வேள்விச்சாலை நோக்கிச் சென்றுவிட்டான். அதன்பின் தெய்வக் கண்ணகியின் திருமுன் யானும் சென்றேன்: அங்கிலையில் கண்ணகித்

தெய்வம், 'பழமை சான்ற வஞ்சிமாநகரில் அத்தாணி மணிமண்டபத்தில்—நின் தந்தையின் திருவடி நிழலில் அமர்ந்திருந்த நின்னை நோக்கி, அரசாளும் அழகிய வடிவிலக்கணம் நின்னிடத்தே உண்டு என உரைத்த சோதிடனை வெகுண்டு பார்த்து, நின் அண்ணன் செங்குட்டுவன் துன்பம் நீங்குமாறு கதிரவன் தோன்றும் கீழ்த்திசையைத் தன் பெயராகக்கொண்டு விளங்கும் குணவாயிற்கோட்டத்தில் புகுந்து உலகாளும் சுமை நீக்கி உள்ளமும் சென்று அறிய வொண்ணா முடிவில்லா முத்தி இன்பத்தை ஆளும் மன்னவன் ஆயினை,' என்று கூறியது.

இவ்வாறு கண்ணகிக் கடவுள் கூறியதாக இளங்கோ அடிகள் கூறும் சுய சரிதம் இதுவே:

"மாடல மறையோன் தன்னொடுங் கூடித்
தாழ்கழல் மன்னர் தன்னடி போற்ற
வேள்விச் சாலையின் வேந்தன் போனபின்
யானுஞ் சென்றேன் ; என்னெதிர் எழுந்து,
தேவந் திகைமேல் திகழ்ந்து தோன்றி,
'வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழல் இருந்தோய் ! நின்னை
அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்

அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து
அந்தமில் இன்பத் தரசாள் வேந்'தென்று
என்திறம் உரைத்த இமையோர் இளங்கொடி''

(வரந்தரு காதை: 168-183)

'அண்ணன் இருக்கத் தம்பி ஆள்வது அரச மரபன்று; தமிழினத்தின் புகழ் கெடுக்கும் பழிச் செயலாகும். அதுதான் சோதிடம் கூறும் செய்தி என்றால், அந்தச் சாத்திரத்தைக் 'கோத்த பொய்வேதக் குப்பை' என்று காட்டுவதே கடமை எனக் கருதித் துறவு கொண்டு குணவாயிற் கோட்டம் சேர்ந்தார் இளங்கோ அடிகள். துன்பம் நிறைந்த புவியாள் செல்வம் அவரை விட்டு நீங்கியது; ஆனால், இன்பமே நிறைந்த கவியாள் செல்வம் அவரிடமே அடைக்கலம் புகுந்தது!

இவ்வாறு குணவாயிற்கோட்டத்தில் அருளின் திருவாய்—அமைதியின் அழகுச் செல்வமாய்—வீற்றிருந்த இளங்கோ அடிகளிடம் ஒரு நாள் சேரநாட்டு மலையில் வாழும் குறவர் திரண்டு ஓடி வந்தனர். அந்நாள், இளங்கோ அடிகள் வாழ்விலும், இன்பத் தமிழகத்தின் வரலாற்றிலும் பொன்னாள் எனப் போற்றத் தகுந்த நன்னாள் ஆகும். உதடும் உள்ளமும் பதை பதைக்க ஓடிவந்த குறவர்கள், அடிகளின் முன் தாங்கள் கண்ட காட்சியை—மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியை—உணர்ச்சி நிறைந்த மொழிகளால் எடுத்துரைத்தார்கள். 'அடிகளே,

கண்டறியாதன கண்டோம்! பொன் போலும் தாதுடன் பூத்து விளங்கும் வேங்கை மரமொன்றின் நிழலிலே ஒரு முலை இழந்தாளாய் ஒருத்தி வந்து நின்றாள். அவள் ஒரு திருமா பத்தினி என அறிந்தோம். அவள்பொருட்டு, தேவர் கோனாகிய இந்திரன் தமர் நெருங்கி வந்து அவள் காதல் கணவனைக் காட்டி எங்கள் கண்கள் காண அவளோடும் விண்ணுலகிச் சென்றனர். அந்நிகழ்ச்சி எங்களுக்குப் பெரு வியப்பாய் இருந்தது. அடிகளே, நீங்களும் அதை அறிந்தருள வேண்டும்,' என்று கரவற்ற நெஞ்சத்துடன் கை கூப்பித் தொழுது இளங்கோ அடிகளிடம் தாங்கள் கண்ட காட்சியை எடுத்துரைத்தார்கள். இவ்வாறு இளங்கோ அடிகளிடம் மலை நாட்டுக் குறவர்கள் தங்கள் மனங்கவர்ந்த பெருமாட்டியினைப்பற்றி வியப்புணர்ச்சி பெருகக் கூறும் அற்புதக் காட்சியோடுதான் சிலப்பதிகாரப் பதிகம் தொடங்குகிறது. ஆம், சிலப்பதிகாரக் காவியத்தைப் படிக்கத் தொடங்குவார் கண்களுக்கு முதல் முதலாகத் தோன்றும் காட்சி இதுதான். அருளே வடிவாகக் கொண்ட குன்றக் குறவர்கள் ஒருங்கு கூடித் தாங்கள் முன் செய்த தவப் பயனால் கண் குளிரக் கண்ட திருமாபத்தினியை அறிமுகம் செய்து வைக்கின்றார்கள். என்ன இனிய காட்சி அது! கண்ணகித்தாய் கன்னித் தமிழகத்தை விட்டுப் பிரிந்து காதற்கணவனோடு விண்ணவர்

நாடு புகுந்த அக்காட்சியை — மண்ணுலக மடந்தை விண்ணுலகத் தெய்வமாக மாறிய இறுதித் திருக்காட்சியை—காணும்பேறு பெற்றவர் தமிழ் நாட்டு வேந்தரும் அல்லர்; புலவரும் அல்லர்; தமிழகத்தின் பழங்குடி மக்களாகிய மலைக் குறவர்களே. ஏன்? சேரவேந்தன் செங்குட்டுவனுக்கும் இளங்கோ அடிகளுக்கும் வீரபத்தினியின் செய்தியை முதன்முதல் தெரிவித்தவர்களும் இம்மலைவாழ் தமிழ் மக்களே ஆவார்கள். கண்ணகிக்காகக் கற்கோயில் கட்ட இமயம் வரை எந்தச் செங்குட்டுவன் சென்றானே, அவனும், சொற்கோயில் அமைக்க எந்த இளங்கோவின் நெஞ்சம் குமுறியதோ அவரும், கண்ணகியைப் பற்றி முதன்முதல் தெரிந்துகொண்டது தங்கள் நாட்டு மக்களாலேயே—மக்களின் தெய்வமாகவே.

கண்ணகிபற்றிக் குறவர்கள் வந்து கூறிய நேரத்தில் இளங்கோ அடிகள்பால் சென்றிருந்த தண்டமிழ்ச் சாத்தனர், 'அடிகளே, அந்நிகழ்ச்சிக்குக் காரணமான கதையை யான் அறிவேன்,' என்று கூற ஆரம்பித்துச் சொல் நயமும் பொருள் நயமும் நிறைந்த சொற்களால் வீரக்கண்ணகியின் வரலாற்றை எடுத்துரைக்கலானர்:

'ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேராச் சிறப்பின் புகார்நக ரத்துக்
கோவல னென்பானோர் வாணிகன், அவ்வூர்
நாடக மேத்தும் நாடகக் கணிகையொடு

ஆடிய கொள்கையின் அரும்பொருள் கேடுறக்
கண்ணகி யென்பாள் மனைவி, அவள்கால்
பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பின் பாண்டியன் பெருஞ்சீர்
மாடமதுரை புகுந்தனன் அதுகொண்டு
மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் தன்கைக் காட்டக்
'கோப்பெருந் தேவிக் கல்லதை இச்சிலம்பு
யாப்புற வில்லை; ஈங் கிருக்கெ'ன் றேகிப்
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென,
வினைவிளை காலம் ஆதலின், யாவதுஞ்
சினையலர் வேம்பன் தேரா னாகிக்
கன்றிய காவலர்க் கூஉய்,'அக் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கெ'னக்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காணாள் நெடுங்கணீர் உகுத்துப்
பத்தினி யாகலின் பாண்டியன் கேடுற
முத்தார மார்பின் முலைமுகந் திருகி
நிலைகெழு கூடல் நீளெரி ஊட்டிய
பலர்புகழ் பத்தினி யாகும் இவளென'

(பதிகம்: 12—36)

இளங்கோ அடிகளுக்குச் சாத்தனார் கூறினார். சாத்தனாரின் வாய்மொழி கேட்ட இளங்கோ அடிகள், 'புலவர் பெருமானீர், 'வினை விளை காலம்' என்றீரே! யாது அவ்வினை?' என்றார். அதற்கு மதுரை மூதூர் வெள்ளியம்பலத்தில் நள்ளிருளில் தாம் துயின்றுகொண்டிருந்த போது துயரமே நிறைந்து நின்ற மறக்கற்

பினளாகிய கண்ணகியின் முன்னே மதுரை மாதெய்வம் தோன்றி, 'கொதி அழல் சீற்றம் கொங்கையின் விளைத்தோள்' இப்பிறப்பில் இவ்வாறுவதற்குக் காரணமான 'தொல்லை வினையை'—பழவினையை—எடுத்துக் கூறி, 'கண்ணகியே, இன்றைக்குப் பதினாலாம் நாளின் பகற்பொழுது நீங்கிய பின் நின் ஆருயிர்க் காதலனை அமரவடிவில் காண்பாய்; மக்கள் வடிவில் நீ அவனைக் காண்பது இனி இல்லை,' என்று கூறிய குற்றமில்லாத நற்சொற்களை விளக்கிக் கூறினர் புலவர் பெருந்தகையாராகிய சாத்தனர்.

கேட்டார் இளங்கோ அடிகள் நெஞ்சை யள்ளும் கண்ணகியின் கதையை. அவர் அகக் கண்கள் முன்பு எத்தனை எத்தனையோ இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கைக் காட்சிகள் — தமிழகத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் பின்னிப் பிணைந்த பெருங்காட்சிகள் — ஒன்றன்பின் ஒன்றுய்த் தோன்றின. அவர் உள்ளம் குமுறியது. பால் வெண்மதியம் கண்ட நீலத்திரைக் கடலாய் அக்கவிஞர் பெருமானர் நெஞ்சம் கொந்தளித்தது. எத்தனையோ நாளாய்த் தம் உள்ளத்தை உயிரை எல்லாம் உருக்கி வார்த்து அழியாத் தமிழ்க் காவியம் ஒன்றை முதன்முதலாக ஆக்க இளங்கோ அடிகள் கொண்டிருந்த எண்ணம் எழுச்சி பெறலாயிற்று. சாத்தனர் கூறிய சரித்திரம் இளங்கோ அடிகளின் கற்பனை மலிந்த இலட்

சிய நெஞ்சத்திற்குப் பெருவிருந்தாயிற்று. அவர் உள்ளக் கடலில் வகை வகையான எண்ண அலைகள் எழுந்து முழங்கலாயின. 'இனி ஒரு கணமும் வீரபத்தினியின் வரலாற்றைப் பாடாது இருக்க முடியாது! சிலப்பதிகாரக் காவியத்தைச் செய்யாமல் உறங்க முடியாது!' என்ற நிலை அவர்க்குத் தோன்றியது. அதை இளங்கோ அடிகளே எவ்வளவு அழகாகத்—திறமையாக—உறுதி வாய்ந்த குரலில் கூறுவதாகப் பதிகம் பாடுகிறது பாருங்கள்:

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்'
(பதிகம்: 55—60)

என்ன உள்ளம்—உறுதி—இளங்கோ அடிகளுக்கு!

சிலப்பதிகாரக் காவியம் பிறந்த வரலாற்றைப் பதிகத்தின் ஆசிரியர் இவ்வகையிலேதான் சித்திரித்துக் காட்டுகிறார். தொண்ணூறு அடிகளைக் கொண்ட 'பதிகம்' ஆறே அடிகளில் மூன்று முக்கிய நோக்கங்களை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்ற பேரார்வத்தால் இளங்கோ அடிகள் சிலப்பதிகாரக் காவியத்தைச் செய்ய உறுதி கொண்ட வரலாற்றைக்

கூறுகிறது. இப்பகுதி வாயிலாக இளங்கோ அடிகள் உள்ளமும், அவர் காவியத்தின் நோக்கங்களாக எவ்வெவற்றைக் கருதியுள்ளார் என்பதும் விளங்குகின்றனவல்லவோ? ஆனால், 'சிலப்பதிகாரப் பதிகத்தின் ஆசிரியர் யார்? அவர் பதிகம் பாடிய காலம் எது?' என்பவற்றில் கருத்து வேறுபாடுகள் இருப்பது போலவே, 'காவியத்தின் நோக்கங்கள் பதிக ஆசிரியர் சுட்டும் இவையோ, அன்றி வேறோ? இவையேயெனின், இவற்றுள் தலைமையாயது எது?' என்ற ஆராய்ச்சியும் அறிஞர்களிடை இருந்து வருகின்றது.

பதிக ஆசிரியர் கூறும் இம்மூன்று நோக்கங்களைத் தவிர வேறு எது இளங்கோ அடிகளின்—அவர் காவியத்தின்—குறிக்கோளாக இருக்க முடியும்? பதிக ஆசிரியரே மற்றொரு குறிப்பையும் நமக்கு நினைவுறுத்துகிறார்.

'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'

என்று இளங்கோ அடிகள் உறுதியோடு கூறியதைக் கேட்ட சாத்தனார் நெஞ்சம் இன்பக் கடலில் மூழ்கியது. சாத்தனார் நேரில் அறிந்த வரலாறு கண்ணகியின் வரலாறு! அவர்தாம் அதை இளங்கோ அடிகளுக்குக் கூறினார். எனினும், 'அரசு துறந்து அறம் ஆளும் நெஞ்சினராகிய இளங்கோ அடிகள் ஆர்வத்துடன் 'யான் அதைப் பாடுவேன்' என்று கூறியதும், 'அடிகளே, அவ்வாறே செய்தருளுங்கள்! சிலப்பதிகாரக்கதை மூவேந்தர்கள் ஆளும் மூன்று

நாட்டிற்கும் உரியது. தமிழகம் முழுவதற்கும் உரிய கதையை—சேர சோழ பாண்டியர் மூவ ரோடும் தொடர்பு கொண்ட வரலாற்றை—மன்னர் வாழ்க்கையையும் மக்கள் வாழ்க்கை யையும் தன்னகத்தே கொண்ட தீஞ்சுவைக் காவியத்தை—முற்றத் துறந்த அடிகளாகிய நீங்களேதான் செய்தருள வேண்டும்,' என்ற இக்கருத்தெல்லாம் அமைய 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக,' என்றார் தண்டமிழ்ச் சாத்தனார். அவ்வாறு அவர் கூறிய அமுதமொழிகள் அருந்தமிழ்ப் புலவரின் பண்பாட்டிற்கே அமைந்த ஒரு விளக்கம் அன்றோ?

சிலப்பதிகாரச் செய்யுள் 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது' என்று நற்றமிழ்ப் புலவர் சாத்தனார் நவின்றது இளங்கோ அடிகளின் செவியில் ஒலித்துக்கொண்டே இருந் திருக்க வேண்டும். அதன் எதிரொலியை நடுகற்காதையின் இறுதிப் பகுதியில் நம்மால் கேட்க முடிகிறது. கண்ணகித் தெய்வம், 'நல்ல ஆட்சி முறையிலேதான் நாட்டு மக்களுக்கு நல்லொழுக்கம் நிலவும்; நங்கையர்க்குக் கற்பு விளங்கும்' என்பதைச் சோழ வேந்தனால் விளங் கச் செய்தாள்; 'நீதி நெறி தவறிச் செங்கோல் வளைந்தால் தமிழ் மன்னர் தம் நல்லுயிரையும் இழப்பர்' என்பதைப் பாண்டிய வேந்தனால் விளங்கச் செய்தாள்; 'வீரத்தால் வஞ்சினம்

கூறி மேற்கொண்ட கடமையைச் செய்து முடித்தால் அன்றித் தமிழ் அரசர் சீற்றம் தணியாது' என்பதைச் சேரவேந்தனால் விளங்கச் செய்தாள். இக்கருத்தைக் கொண்ட கவியோவியம்,

'அருந்திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாகலின்
ஆர்புனை சென்னி யரசர்க் களித்துச்
செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலங் காவல் மன்னவர்க் களித்து
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்த ரென்பதை
வடதிசை மருங்கின் மன்னவ ரறியக்
குடதிசை வாழுங் கொற்றவற் களித்து'

(நடுகற்காதை : 207—217)

என்பது.

இது, புகாரிலே பிறந்து, வளர்ந்து, மணந்து, வாழ்ந்து, வருந்தி, மதுரையிலே புகுந்து, கணவனை இழந்து, புலம்பி, அவன் மேல் படர்ந்த பழி துடைக்கப் போராடி, பாண்டியனை வென்று, வீரக் கண்ணகியாய் வஞ்சி சென்று, மலைமீதேறிப் பதினான்காம் நாளில் இவ்வுலக வாழ்வினை உதறி எறிந்த அன்னையின் வாழ்வு; முடிகெழு மூவேந்தர் ஆட்சியையும் ஆட்கொள்ளும் வல்லமை பெற்றிருந்ததைக் காட்டுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. எனினும், இதையே காவியத்தின்

இறுதி இலட்சியமாகக் கொள்ளல் தகுமோ? குடி மக்கள் காப்பியமாகிய சிலப்பதிகாரம் கோவேந்தர்களின் அரசியலோடு கண்ணகி வரலாறு கொண்டிருந்த தொடர்பைக் காட்டுவதோடு அமையுமோ?

இவ்வாறே சிலப்பதிகாரத்தின் நோக்கங்கள் இவைதாமோ என்று நம்மைச் சிந்திக்க வைக்கும் பகுதி ஒன்று காவியத்தின் முடிவிடத்தை அணிசெய்து நிற்கின்றது. இளங்கோ அடிகள் தம் பெருங்காவியத்தை முடிக்கும் நிலையில் தாம் கூறிய சுவை நிறைந்த காவியத்தைச் 'செவிவாயாக நெஞ்சுகளனாக'க் கேட்ட நற்றமிழ் மக்களை நோக்கிக் கூறுவதாக அமைத்துள்ளது அறமணம் கமழும் அப்பகுதி :

'தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர் !
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் ;
தெய்வந் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின் ;
பொய்யுரை அஞ்சுமின் ; புறஞ்சொற் போற்றுமின் ;
ஊனூண் துறமின் ; உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் ; தவம்பல தாங்குமின் ;
செய்ந்நன்றி கொல்லன்மின் ; தீநட் பிகழ்மின் ;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின் ;
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின் ;
பிறர்மனை அஞ்சுமின் ; பிழையுயிர் ஓம்புமின் ;
அறமனை காமின் ; அல்லவை கடிமின் ;
கள்ளும் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின் ;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா ;

உளநாள் வரையாது; ஒல்லுவ தொழியாது;
செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்;
மல்லன் ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்.'

(வரந்தரு காதை : 185-202)

பண்பும் பயனும் நிறைந்த தம் காவியத்தை மனங்கசிந்து கேட்டுப் பண்பட்ட மக்களின் மனமாகிய நன்செய் நிலத்தில் சொல்லேர் உழவராகிய இளங்கோ அடிகள் விதைக்கும் அற விதைகளாகிய இவைகளே அவர் காவியத்தின் நோக்கங்களோ! இப்பகுதியில் இளங்கோ அடிகள் கூறியுள்ள அறிவுரைகள் யாவும் சிறந்த நீதிகளே எனினும், இப்பகுதியை ஊன்றிப் படிப்பார்—இதன் போக்கையும் நோக்கையும் ஆழ்ந்து கருதுவார்—தம் காவியத்தைப் படித்துப் பண்பட்டவர்கள் பயன் காணும் வகையில் இளங்கோ அடிகள் பொதுவாகக் கூறும் ஓர் அறவுரையாகவே இதைக் கொள்ள இயலும்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புதைந்து கிடக்கும் செய்திகள் யாவுமே, சிலப்பதிகாரக் காவியம் மன்பதைக்குணர்த்தும் சிறந்த உண்மைகளாய் இருக்க், அவற்றுளெல்லாம் தலையாயது எது? பெருங்காப்பியம் ஒன்றைச் செய்த இளங்கோ அடிகளின் தலைமையான குறிக்கோள் யாது? இவ்வினாவிற்கு உரிய விடை பதிகத்துள்ளும் நூலுள்ளும் குறிப்பிட்ட ஓரிடத்தில் மட்டுமே அமைந்ததில்லை. நீக்கமற நிறைந்திருக்கும் கடவுள் தத்

துவம் போலக் காவியம் முழுவதிலும் அந்த இலட்சிய ஒளி பாய்ந்து பரவிக் கிடக்கின்றது.

இளங்கோ அடிகள் தம் காப்பியத் தலைவியாகிய கண்ணகியை—மறக்கற்புடைய மங்கையை—தெய்வத்திறம் வாய்ந்த நல்லாளைத்—தொடக்க முதல் சித்திரித்துக் காட்டும் பாங்கு, அவர் உள்ளத்தில் உறைந்து கிடந்த இலட்சியத்தை—குறிக்கோளை—நமக்குச் 'சொல்லாமற் சொல்லி' உணர்த்தி வைக்கின்றது.

இளங்கோ அடிகள் ஒரு துறவியர்; வீரத் துறவியர்; மணி முடி தரித்து வாழும் மாளிகை வாழ்வை இமைப்பொழுதில் மறந்து, துறந்து, அரசவை விட்டு வெளியேறி, குணவாயிற் கோட்டம் புகுந்த கொள்கை படைத்த துறவியர். துறவறத்தின் எல்லையைக் கண்ட அத்தூயோரின் அகக் கண்களுக்கு இல்லறத்தின் பெருமை புலனாயிற்று; கற்பின் திண்மை விளங்கலாயிற்று; தவ வழிப்பட்ட வீரமும் பெருமையும் தோன்றலாயின. அவற்றின் பயனே அவர் செய்த காவியம்.

காதல் வாழ்வையே கடுந்தவ வாழ்வாக்கி வாழ்ந்த தாய் கண்ணகி. அந்தத் தவம் தந்த ஆற்றலாலேயே—வீரத்தாலேயே—

'துன்புறு வனநோற்றுத்
துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற
மன்னவன் தவறிழைப்ப

அன்பனை இழந்தேன்யான்
அவலங்கொண் டழிவலோ!'

(துன்பமாலை: 35—37.)

என்று ஆத்திரம் கொண்டு அறிவறை போகிய பாண்டிநாட்டு அரசனை எதிர்த்து வழக்காடினுள். அவன் உடலும் உள்ளமும் உயிரும் அதிர அரசவையில் கண்ணகி தன் அணி மணிக்காற் சிலம்பை எடுத்து உடைத்தெறிந்தாள். தன் தேவியின் சிலம்பில் உள்ள பரல் முத்தாக, கண்ணகி உடைத்த சிலம்பினின்றும் தெறித்தது மாணிக்கம் எனக் கண்டான் வேந்தன். தாழ்ந்தது அவன் குடை! தளர்ந்தது அவன் செங்கோல்! 'கெடுக என் ஆயுள்!' என வீழ்ந்து மாண்டான். இதைக் கண்டும் அமையாத கண்ணகியின் சீற்றம் கோநகரையே—கூடல் மாநகரையே—சீறி அழித்தது. வள்ளுவர், கற்புடைப் பெண்டிரின் சொல்லுக்கு மழையும் பணியும் என்றார். சிலப்பதிகாரமோ, மறக்கற்புடை மங்கையின் ஆணைக்குத் தீயும் குற்றேவல் புரியும் காட்சியைக் காட்டுகிறது. கண்ணகி புரிந்த 'இல்லறத் தவத்தின்' எல்லையில்லா ஆற்றலை—குணமெனும் குன்றேறி நின்ற அம்மறக் கற்புடையாளின் மாண்பை—ஒழுக்கத்தால் அவள் பெற்ற உயர்வை—கற்புத் தவத்தால் அவள் பெற்ற பெருமையை—அப்பெருமையின் முன்பு உலகாள் வேந்தர் புகழ் எல்லாம் கதிரவன் முன்னின்ற விளக்கொளியாய் ஒடுங்கும் சிறப்

பினை—அச்சிறப்பிலே சொல்லை—செயலை—சிந்தனையை அர்ப்பணிக்கும் உலகம் காண வல்ல ஒற்றுமை இன்பத்தை—உலகிற்குக் காட்டவேண்டும் என்பதே இளங்கோ அடிகளின் இதயத்தில் உறைந்த குறிக்கோளாய் இருந்திருக்க வேண்டும்.

மேல் நாட்டு இலக்கிய ஆராய்ச்சிப் பேரறிஞர் ஒருவர் அருமையாகச் சொன்னார், 'உண்மையிலேயே மிகச் சிறந்ததோர் இலக்கியத்தின் அடையாளம், எவையேனும் சில புதிய உண்மைகளை—தனக்கு முன் எவராலும் கூறப்படாத உண்மைகளை—தனக்கே உரிய புதிய முறையில் கூறுவதுதான்' என்று[7]. இக் கருத்தை நினைவிற்கொண்டு பார்க்கும் போது சிலப்பதிகாரத்தின் பெருமை நமக்குத் தெற்றென விளங்கும்.

உயிரனைய தமிழ் மொழியில் முதல் முதலாக ஒரு காப்பியத்தைச் செய்ய நினைத்த இளங்கோ அடிகள், முடிசார்ந்த மன்னர் ஆட்சி பிடிசாம்பலாய் அழிந்து போக நேரிடினும், அழியாத பெருமை வாய்ந்த ஒழுக்கத்தின்—கற்பின்—தவத்தின் பேராற்றலை விளக்கி, அவ்வாற்றலுக்குத் தலைவணங்கி வழிபாடாற்றி உய்ய விரும்பும் விருப்பத்திலே, தமிழகத்தின் ஒற்றுமை—இந்தியாவின் ஒற்றுமை—உலகத்தின் ஒற்றுமை அடங்கிக் கிடக்கிறது என்பதையும் தெரிவித்துள்ளார். உலகின் ஒற்றுமையும் உயர்வும் செங்கோல்

ஏந்திய மன்னர்களின் களியாட்டத்திலோ—கொற்ற வெண்குடையின் சிறப்பிலோ—வேலின் வெற்றியிலோ—இல்லை. ஆனால், உயிரினும் சிறந்த விழுப்பம் தரும் ஒழுக்க வாழ்வாம் தவ வாழ்விற்கு நிகழ்த்தும் வீர வழிபாட்டிலேயே அது அடங்கியுள்ளது,' என்ற உண்மையை உலகுக்குணர்த்தப் பெருங்கருணை கொண்ட உள்ளமே இளங்கோ அடிகளின் உள்ளம்.

இவ்வுண்மையைச் சிலப்பதிகாரக் காவியத்தில் அடிகளார் தொடக்க முதல் 'கண்ணகியை வருணித்துள்ள பாங்கைக் கூர்ந்து கவனிப்பது வாயிலாக நன்குணரலாம். கண்ணகி பிறந்த குடும்பமும் புகுந்த குடும்பமும் மிகு பெருஞ்செல்வம் வாய்ந்த குடும்பங்களாய் இருந்தும் அவளை வருணிக்கும்போது தம் அரண்மனைச் செல்வ வாழ்வின் அனுபவம் சிறிதையும் பயன்படுத்தாமல் விட்டுத் துறந்தார்'[8] இளங்கோ அடிகள். மாறாகக் 'கண்ணகியின் தவக்கோலத்தை வருணிப்பதிலேயே அவர் ஆர்வம் முந்துகிறது?'[9]

'அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல அணியின் பிறிதுஅணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்

பவள வாள்நுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி'

(அந்தி. 47-57.)

இளங்கோ அடிகளின் இச்சொல்லோவியத்தில் சிந்தனையைச் செலுத்துவார் அடிகளாரின் அருள் நெஞ்சை—பொன்னையும் பொருளையும் போகத்தையும் வெறுத்துக் கற்புத்தவம் நிறைந்த வாழ்க்கையையே போற்றும் துறவு நெஞ்சை—காண்பர். இந்த ஓரிடத்தில் மட்டும் அன்றி, இன்னும் நூலுள் எத்தனையோ இடங்களில் எத்தனையோ பாத்திரங்கள் வாயிலாகக் கண்ணகியின் தெய்வப் பண்பை—தவப்பண்பை—விளக்கிக்கொண்டே போகிறார் அடிகளார். தெய்வமுற்ற முழங்குவாய்ச் சாலினி,

'இவளோ, கொங்கச் செல்வி ; குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை ; செய்தவக் கொழுந்து ;
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி.'

(வேட்டுவ வரி, 47-50.)

என்று வாழ்த்துகிறாள். துறவியராகிய இளங்கோவடிகள்,

'கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.'

(அடைக்கலக் காதை, 143-144.)

என்று போற்றுகிறார். கோவேந்தன் தவறு

கண்டு கொதித்தெழுந்த வீரக் கண்ணகியின் மறநெஞ்சைக் கண்ட மதுரை மக்கள்,

'செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல் !'

என்று வாய்விட்டுக் கூறுகின்றார்கள். வஞ்சிக் காண்டத்திலோ, குன்றக் குறவர் 'இவள் போலும் நம் குலத்துக்கோர் இருந்தெய்வம் இல்லை,' என்று சேரவேந்தனிடம் சென்று கூறுவதையும், அவன் தன் அரசியை நோக்கி, 'தேவி, கணவன் மாண்டதும் உயிர் துறந்த பாண்டிமா தேவியினும், மறக் கற்புடைய வளாய் மலைநாடு வந்த மங்கையினும் நீ வியக்கும் சிறந்தோர் யார்?' என்ற சிக்கலான கேள்வியைக் கேட்ட சமயத்தில், 'நம் அகல் நாடு அடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்,' என்று இருங்கோ வேண்மாள் ஆர்வத்துடன் கூறிய சீரான பதிலையும், அதன் வழிநின்று வஞ்சி வேந்தன் வானவரும் போற்றத் தன் வீரத்தால் பெற்ற கல்கொண்டு கண்ணகிக்குக் கோயில் எடுத்த சிறப்பையும், அக்கோயிலை மன்னவன்,

'வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவ னின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்

எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே'

(*வரந்தரு காதை*, 155-163)

வணங்கிய காட்சியையும், தமிழகத்தின் பெருங் குடி மக்களுள் ஒருத்தியாய்த் தோன்றிய தன் திருவடிகளை முடி சூடிய வேந்தரும் மக்களும் பணிந்து வணங்கி, தமிழகமும்—பாரதமும்—உலகமும் பத்தினி வழிபாட்டால் ஒன்றுபட்டு உய்ய விழையும் காட்சியைக் கண்ணுற்ற கண்ணகித் தெய்வம், 'தந்தேன் வரம்' என்று குரல் கொடுத்த செய்தியையும் இளங்கோ அடிகள் நெய்போல இதயம் உருகிப்பாடும் பகுதிகள், 'பத்தினி வழிபாட்டால் உலகம் உய்யும்,' என்னும் ஒப்பற்ற குறிக்கோளையே உணர்த்துகின்றன அல்லவா?

இறுதியாக இன்னுமோர் உண்மையும் நாம் நினைவுகூர்தற்கு உரியது. இளங்கோ, தாம் செய்த அரிய இலக்கியத்திற்குச் சூட்டிய பெயரும், அவர் உள்ளத்தில் ஊறிக்கிடந்த இவ் வழிபாட்டுணர்வையே சுட்டிக் காட்டுகிறது.

'சிலப்பதிகாரம்' என்று காவியத்திற்கு அவர் இட்ட பெயரிலேயே வழிபாட்டிற்குரிய தெய்வம் கண்ணகியே—அவள் காற்சிலம்பே—என்னும் பொருள் புதைந்து கிடப்பது அறிந்து போற்றற்கு உரியது அன்றோ?

மறக்கற்பால் உயர்ந்த மங்கை கண்ணகி வீரஞ் செறிந்த—உணர்வு கலந்த—ஒழுக்கத்தால், விண்ணவரும் மண்ணவரும் முடிவேந்தரும் குடிமக்களும் போற்றும் விழுப்பம் பெற்றவள் கண்ணகி. பெண்ணாய்ப் பிறந்து பெருமை மிக்க தெய்வமான அவளுக்காக நிகழும் வீர வழிபாட்டால்—பத்தினித் தெய்வ வழிபாட்டால்–ஒழுக்க வழிபாட்டால்–பாருலகம் உய்யும். எனவே, ஆட்கிப் பிரிவினைகளாலும் சாதி சமயப் பிணக்குகளாலும் சிறுமையுறும் சமுதாயம் ஒன்றுபட்டு, 'பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரந்து' வாழும் ஒப்பற்ற சமுதாயமாக உருவாகும் என்பதே இளங்கோ அடிகள் இயற்றிய இன்பத் தமிழ்க் காவியத்தின் ஒரு பெருங்குறிக்கோளாகும்.

# 3

# சிலம்பின் புகழ்

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று ஒரு மணியாரம்' பூண்ட பெருமை தமிழன்னையின் தனிச்சிறப்பாகும். தமிழன்னையின் மணி மார்பில் அணி செய்யும் அவ்வழகிய கவியாரத்தின் புகழ் 'மண் தேய்த்த' மாண்பும் காலங் கடந்த கீர்த்தியும் படைத்தது. தமிழ்க்குலம் கண்ட தலைக்காப்பியத்தின் பெரும்புகழையும் அளவிடற்கரிய பெருஞ்சிறப்புக்களையும் உலகறியச் செய்த சான்றோர் பலராவர். அவர்களுடைய பேருழைப்பு இல்லையானால், மூன்று கோடித் தமிழ் மக்கள் இன்று உலக இலக்கிய அரங்கிலே தலை நிமிர்ந்து நிற்கும் தனிப்பேற்றினை இழந்தேபோயிருப்பர். எனவே, சிலம்பின் புகழைப் போற்றும் நாம் அப்பெருமக்களையும் வணக்கத்தோடும் வழி வழிபாட்டுணர்ச்சியோடும் நினைவு கூரல் சாலப் பொருத்தமுடையதாகும். ஒரு பொருளின் உயர்வும் புகழும் அப்பொருளை உலகம் போற்றிப் பயன்கொள்வதால் விளைவன அல்லவா?

சிலம்பின் அடியார் என்று எண்ணும் போது பலரைப் பற்றிய எண்ணம் கற்றவர் உள்ளத்தில் பொங்கி எழும். அவருள் முதன்மை சான்ற இருவர் அச்சு வாகனம் தமிழகத்திற்கு வாராத மிகப் பழங்காலத்தைச்

சேர்ந்தவர். ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுந்த பெருங்காவியம் சிலப்பதிகாரம். உயிரும் உள்ளமும் உடலும் போன்றும், மன மொழி மெய் போன்றும், இயலும் இசையும் நாடகமும் ஒன்றுபட்டுத் தமிழினத்தின் கலைப் புகழைத் தரணியிலுள்ளோர் எல்லோரும் போற்றும்படி ஓங்கி உயர்ந்து விளங்கிய பொற் காலத்தில் பிறந்த வீர காவியம் சிலப்பதிகாரம். அந்நாளில் இருந்த தமிழகத்தின் சிறப்பெல் லாம் கால வெள்ளத்திலே அழிந்துபோயிற்று. எனவே, தாம் வாழ்ந்த காலத்தின் தலை சிறந்த பிரதிநிதியாய்த் தோன்றி இளங்கோ அடிகள் யாத்த அப்பெருநூலுள் புதைந்து கிடக்கும் பல்வேறு உண்மைகள் பிற்காலத் தமிழர் கண்களுக்கு ஒளி மங்கியவையாகவே காணப் பட்டன. அந்நிலையில் இளங்கோ செய்த புண்ணியத்தால்—தமிழன்னை செய்த தவத்தால்—தோன்றிய இருபெருஞ்சான்றோர்களே அரும் பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும்.

சிலப்பதிகாரத்திற்கு உரிய பழைய உரை களாக இன்று நாம் காணக்கிடைப்பன அரும் பத உரையாசிரியர் உரையும் அடியார்க்கு நல் லார் உரையுமே. இவ்விரு உரைகளுள்ளும் அரும்பத உரையே அருமை சான்றது; அடி யார்க்கு நல்லார் உரையினும் பழமையானது; பயன் செறிந்தது; ஆயினும், அவ்வரும்பத உரைக்கும் முன்னதாகச் சிலம்பிற்கு ஓர் உரை இருந்திருக்க வேண்டுமென்பது அரும்பத

உரையாசிரியரின் உரைக் குறிப்புக்கள் சில வற்றால் புலனாகின்றது.[10] ஆயினும், நம் தவக் குறையால் அவ்வுரை கிடைத்திலது.

அரும்பத உரையாசிரியர் பழுத்த சைவர்; ஆனால், பரந்த சமயப் பொது நோக்கம் படைத்த சான்றோர். சிலப்பதிகாரத்தின்பால் அவர் கொண்டிருந்த ஈடுபாடு அப்பெருநூலைப் பற்றி அவர் உள்ளம் உருகிப் பாடியுள்ள உரைப்பாயிரச் செய்யுள் ஒன்றாலேயே இன்று புலனாகின்றது. சிலப்பதிகாரத்திற்குச் சமயக் காழ்ப்பின்றி உரை கண்ட அப்பெருந்தகை யார் பத்தினித் தேவியின் புகழ் போற்றும் சிலம்புச் செல்வத்தை இம்மை மறுமை இரண் டிற்கும் பயனளிக்கும் சாத்திர நூலாகவே கருதிய பான்மை வியந்து போற்றற்குரியது.[11]

'கரும்பு மிளநீருங் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி—அரும்பவிழ்தார்
சேரமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி.'

இதுவே அரும்பத உரையாசிரியர் மூத்த பிள்ளையாரிடம் செய்துகொண்ட அரியவழிபாடு.

அரும்பத உரையாசிரியரின் ஆராய்ச்சித் திறன் அறிஞர் உலகால் என்றும் நன்றியோடு போற்றிப் பயனடையும் தன்மை வாய்ந்தது. சிலப்பதிகாரத்திற்கு உரிய எத்தனையோ பெருஞ்சிறப்புக்களுள் தலைமைசான்ற ஒன்று அந்நூலுள் பழந்தமிழர் இசை—நாடகம் பற்றிக்

காணப்படும் குறிப்பேயாகும். இன்றைய சூழ்நிலையில் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும் இல்லையேல், அவற்றிற்கு உண்மைப்பொருள் காணல் இயலாது. அத்தகையதொரு தீங்கு தமிழ்மக்களைச் சாராமல் தடுத்தாண்ட பெருமை அரும்பத உரையாசிரியரின் தனி உரிமை. 'இசை நாடகப் பகுதிகளுக்கு உரை கூறிய வகையில் அடியார்க்கு நல்லாரும் இவருக்குக் கடன் பட்டவர். ....வேனிற்காதையில் 'அகநிலை மருதம், புறநிலை மருதம், அருகியல் மருதம், பெருகியல் மருதம்' என்பவற்றிற்கு அரும்பத உரையாசிரியர் இலக்கணமும் பாட்டும் மாத்திரையும் காட்டியிருப்பதும், அடியார்க்கு நல்லார் அவற்றை வாளா விட்டிருப்பதும் அறியற்பாலன. அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் மாறுபட எழுதியிருக்கும் உரைகளை ஆராய்வுழிச் சில இடங்களில் அரும்பதவுரையே பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது. ........சிலப்பதிகாரம் முழுதிற்கும் ஒருவாறு பொருள் தெரிந்துகொள்ள இவ்வரும்பதவுரையே கருவியாயிருந்தது.' —தலைசிறந்த தமிழ்ப் பேரறிஞர் ஒருவரது இலக்கிய மதிப்பீடு இது.[12] சிலம்பின் ஒளியையும் அவ்வொளியின் கருணையால் விபுலானந்தர் வரைந்த யாழ் நூலையும் அவரனைய சான்றோரின் முயற்சியால் ஆலமரம் போல இன்று விழுதுகள் விட்டு வளர்ந்திருக்கும் தமிழிசை இயக்கம் முதலியவற்றையும்

எண்ணும்போது, 'இவையனைத்தின் பெருமையும் விளங்கச் செய்த பெருமானரல்லரா அரும்பத உரையாசிரியர்!' என்று நினைந்து நல்லவர் நெஞ்சம் நெகிழும்.

அரும்பத உரையாசிரியரை அடுத்துச் சிலம்பின் ஒளி விளக்கிய சீர்மையாளர் அடியார்க்கு நல்லார். இலக்கிய அறிவும் இலக்கணப் புலமையும் கணித ஞானமும் சமய உணர்வும் மிக்க அடியார்க்கு நல்லார், 'சிலப்பதிகாரத்திற் சேர்ந்த பொருள் ஆருந்தெரிய விரித்த'[13] தம் உரையால் சிலம்பின் புகழைச் செகமெலாம் போற்றச் செய்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் இப்பெரியார் கொண்டிருந்த ஈடுபாடு இவர் பாடியருளிய அருமை சான்ற பாடலொன்றால் புலனாகின்றது:[14]

'எழுத்தின் றிறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்!'

இத்தகு ஈடுபாடு கொண்டு சிலம்பிற்கு ஒளி செய்த இப்பெரியாரின் உரைநூலின் பல்வேறு பகுதிகள் இப்பொழுது கிடைக்கவில்லை. என்றாலும், காலமெனும் கூற்றின் கொடுமையினின்றும் சிலம்பைத் தடுத்து அருள் செய்த இத்தமிழ்ப்பெருஞ் சான்றோரின் புகழ் என்றும் அழியாத தன்மை படைத்தது என்பதில் ஐயமில்லை.

பனையோலை வாயிலாகச் சிலம்பின் ஒளியைக் காப்பாற்றிய இத்தமிழ்ச் சான்றோர்களின் அடியொற்றித் தோன்றிச் சிலப்பதிகாரத்தை அச்சுவாகனம் ஏற்றி நாட்டுமக்களுக்குப் பயனடையுமாறு செய்யத் துடித்த தமிழ்ப் பெரியோர்களைப்பற்றி இனிக் காண்போம்:

பின்னாளில் தமிழகத்தில் தமிழரசு இல்லாக் கொடுமையால் தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலைகட்கும் நேர்ந்த தீங்குகள் கணக்கற்றன. எத்தனையோ தமிழ் இலக்கிய, இலக்கண, கலை நூல்கள் கவனிப்பாரற்றுக் கவிராயர் வீட்டுப் பரண்களிலும் மடாதிபதிகளின் பேழைகளிலும் மட்கி மடிந்துகொண்டிருந்தன. அந்நிலையில் தமிழுக்கு நேர்ந்த கொடுமையைச் சகிக்க முடியாத உள்ளங்கொண்டு அல்லும் பகலும் அனவரதமும் உள்ளங்காலெலும்பு தேய ஊரூராய் நடந்து வீடுகண்டவர்போல ஏடுகண்ட போது எக்களிப்புக் கொண்டு தமிழன்னைக்குச் சேவை செய்த அந்த நல்லோர்களை நினைக்கும் போது நம்மை அறியாமல் நன்றி உணர்ச்சியினால் நம் கண் கலங்கும். தந்நலமற்ற தமிழ்ப்பணி புரிந்துவிட்டு இன்று விண்ணவர்க்கு விருந்தாகியுள்ள அவ்வித்தகர்களுக்கு நன்றி உணர்ச்சியால் பெருகிவரும் கண்ணீரையன்றி வேறெதைக் காணிக்கையாக நாம் கொடுக்க வல்லோம்? 'நீங்கள் தமிழன்னைக்குச் செய்த தலைசான்ற பணிகளில் ஆயிரத்தில் ஒரு பங்கையேனும் எங்கள் ஆயுள் முடிவதற்குள் நாங்கள் செய்ய அருள்புரியுங்கள்,' என்று அவர்களை

வேண்டுவதன்றி வேறென்ன நாம் செய்ய வல்லோம்?

முதன்முதல் 1881-ஆம் ஆண்டில் சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்திற்கு அடியார்க்கு நல்லார் உரையோடு ஒரு பதிப்பு வெளி வந்தது. விக்கிரம ஆண்டு சித்திரை மாதம் வெளி வந்த இப்பதிப்பே சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்திற்கு உரையோடு முதன்முதல் வெளி வந்த பதிப்பாகும். சிலப்பதிகாரம் அச்சு வாகனம் ஏற செய்யப்பெற்ற முதல் முயற்சியும் இதுவே. இப்பதிப்பை வெளியிட்ட பெரியார் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணாக்கரும் சென்னை கவன்மெண்டு நார்மன் பாடசாலையில் தமிழ்ப் புலவராயிருந்தவருமான தி. க. சுப்பராயச் செட்டியார் அவர்கள்.[15] பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து இப் பதிப்பை இச்சான்றோர் வெளியிட்டார். ஒரு வகையில் இவரைச் சிலப்பதிகாரத்திற்கு இருபதாம் நூற்றாண்டில் முதன்முதல் உரை காணத் துணிந்த பேரறிவாளர் என்றும் குறிப்பிடல் பொருந்தும். காரணம், அரும்பத உரையிலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் கானல் வரிக்கு உரிய உரைப்பகுதி கிடைக்காமல் போய்விட்டது. இக்குறையை உணர்ந்த இத்தமிழறிஞர், முதன்முதல் கானல் வரிக்கும் உரை எழுதியே இப்பதிப்பை வெளியிட்டு உள்ளார். இன்றைக்குச் சரியாக 78 ஆண்டு கட்கு முன்பு சென்னை மெமோரியல் அச்சுக்

கூடத்தில் அச்சாகி இப்பதிப்பு வெளிவந்துள்ளது. பெரும்புலவர் டாக்டர். உ. வே. சாமிநாதய்யரின் முதற்பதிப்பு 1892-ஆம் ஆண்டிலே தான் வெளியிடப்பெற்றது. அதற்குப் பதினோர் ஆண்டுகட்கு முன்பே சுப்பராயச் செட்டியார் சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்துள்ளார். ஆயினும், டாக்டர் சாமிநாதய்யர் அப்பதிப்புப் பற்றித் தம் சிலப்பதிகாரப் பதிப்பில் ஏதும் குறிப்பிடாதது விந்தையே. அதுவும் தாம் கலை பயின்ற ஆசிரியரிடமே அறிவொளி பெற்றுத் தமக்கும் நன்ருக அறிமுகமாயிருந்த ஒருவர் முயன்று சாதித்துள்ள இச்சாதனையைப்பற்றி அவர் நன்றி பாராட்டாதது வருத்தத்தையே தருகிறது.

சுப்பராயச் செட்டியார் அரும்பத உரையாசிரியரைப் போன்று சைவ சமயத்தவராயினும், சமரச நோக்குடையவரென்பது, அவர் தம் பதிப்பில் 'அறிவிக்கை' என்ற தலைப்பில் எழுதியுள்ள ஆராய்ச்சி முன்னுரைக் குறிப்பால் விளங்குகின்றது. அதே முன்னுரைப் பகுதியில் தம்முடைய சிலப்பதிகாரப் பதிப்பு முயற்சி பற்றி அப்பெருமானர் எழுதியுள்ள வாசகங்கள் நெஞ்சை உருக்கும் நீர்மை படைத்தன.[16]

'இந்நூலுக்கு உரை பல உளவேனும், அவற்றுள் அடியார்க்கு நல்லார் உரையே பெரும்பாலும் வழங்குகின்றது. அவ்வுரை பரந்த உரையாய்க் கடினமான நடையாய

இருத்தலன்றி, 'உரையின் தொடக்கம் இஃது; இறுதி இஃது,' என உணர்தல் அரிது. ஆதலால், யாவரும் எளிதில் உணரத் தொடக்கம் இறுதிகளைப் புலப்படுத்தியும் கடினநடையாய் உள்ளனவற்றை எளிய நடைகளாகச் செய்தும் வேண்டிய இடங்களில் விரித்தும், சுருக்கியும்; கரலிகிதங்களால் வந்து பொருந்தாதனவற்றை விளக்கியும், கானல் வரிக்கு உரையின்மையால் உரை எழுதியும், அரங்கேற்றுக் காதையுள் வரம்பின்றிப் பரந்த இசை நாடக இலக்கணங்கள் பல இடங்களிலும் வருதலால் ஆங்காங்கு உணர இங்குச் சுருக்கியும் இவ்வாறு புகார்க் காண்டமும் மதுரைக் காண்டமும் தனித் தனியாய் அச்சைப் பதிப்பிக்கத் தொடங்கிப் புகார்க் காண்டம் உரையோடு அச்சிட்டிருக்கின்றேன். எனக்குக் கிடைத்த பிரதிகளுள் வஞ்சிக்காண்டம் ஒழிய மற்ற இரண்டு காண்டங்களும் இருத்தலால் வஞ்சிக் காண்டம் உரையோடு வைத்திருப்பவர்கள் எனக்குக் கொடுத்து உதவி செய்யின் இந்நூல் நிலைபெறுமளவும் அவர் பெயரும் நிலை பெறும்படி அச்சைப் பதிப்பேன். எனக்குக் கிடைத்த பிரதிகளோடு திருமயிலை அண்ணுசாமி உபாத்தியாயரும் ஒரு பிரதி உதவினர்.

'பண்டைக் காலத்தில் அச்சிற் பதிப்பிக்கும் வழக்கம் இன்மையால் தமிழிலுள்ள பெரு நூல்கள் உரைகளோடு பல இறந்தன. எஞ்சியிருந்த நூல்கள் சிலரிடத்து அருகி வழங்குத

லால் அவற்றுள் ஒன்றை அவரிடத்து அலைந்து பெறுதல் அரிது. பெறினும், எழுதுவோர் கிடைப்பது அரிது. கிடைப்பினும், கூலி பெரிதாகலின், கொடுத்து எழுதுவித்தல் அரிது. எழுதுவித்துக் கற்கப்புகின் கரலிகிதங்களால் பொதிந்த வழுக்களை நீக்கிப் பொருள் கொள்ளுதல் அரிது என்பது தெரிந்த தமிழ் நூலில் விருப்பமுடையோர் பலரும் பொருளுதவி செய்வாராயின், மதுரைக் காண்டமும் உரையோடு விரைவில் அச்சிட்டு முடியும். தமிழில் இந்நூல் இயலிசை நாடகம் மூன்றும் ஒருங்கு உணர இருத்தலால் யாவருக்கும் பெரும்பயன் தரும் என உணர்க!'

பழந்தமிழுக்கு வாழ்வளிக்க நினைத்த சுப்பராயச் செட்டியாரின் திருவுள்ளத்தை விளக்க அவரே மனம் உருகி எழுதியுள்ள இந்த ஈர நன்மொழிகளே சான்றாகுமன்றோ? திரு. செட்டியார் அவர்கள் மேற்குறித்த சிலப்பதிகாரப் புகார்க்காண்டப் பதிப்பிற்கு விலை 1—12—0 ஆகக் குறித்துள்ளார். மதுரைக் காண்டமும் பின்னர் அதே விலையில் வரும் என்றும் 'அறிவிக்கை' செய்துள்ளனர். திரு. செட்டியார் அவர்கள் பதிப்பு வெளிவந்து நான்கு ஆண்டுகட்குப்பின் 1855-ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்த திரு. சீனிவாசராகவாசாரியார் சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்தை மட்டும் வெளியிட்டார்.

செட்டியாரவர்களின் பதிப்பிற்குப் பின்னர்ச் சிலப்பதிகாரம் முதன்முதல் கண்ட மிகச் சிறந்த பதிப்பு ஐயர் பதிப்பே. 'பல பிரதி ரூபங்களைக்கொண்டு பரிசோதித்துப் பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்' ஐயரவர்கள் அரிதின் முயன்று வெளியிட்ட சிலப்பதிகாரப் பதிப்பு, செந்தமிழ் அன்னைக்குச் செய்யப்பட்ட ஒப்புவமையில்லா ஒரு பெருஞ் சேவையாகும். ஐயரவர்களின் சிலப்பதிகாரப் பதிப்பால் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி புத்துயிர் பெற்றது; தமிழ் நாட்டின் நாகரிக வரலாறு உலகின் கண்களுக்கு முன்னினும் பன்மடங்கு சீரிய முறையில் விளக்கமாயிற்று. தமிழ் இசை இயக்கமும் தமிழ் நாட்டின் உரிமை பற்றிய பல்வேறு இயக்கங்களும் தோன்றுதற்கு ஐயரவர்களின் இப்பதிப்பு ஆரவாரமில்லாத வகையில் வித்திட்டது.

ஐயரவர்களைப் போன்றாரின் இலக்கிய முயற்சிகளாலும் பாரத நாட்டில் திலகர் போன்ற தியாக சீலர்களால் தொடங்கி வைக்கப் பெற்ற சுதந்தர வெறியாலும் தமிழ் வெறியும் விடுதலை வெறியும் கொண்டு தித்திக்கும் தமிழால் நாட்டு மக்களுக்கெல்லாம் தேச பத்திக் கனலை மூட்டியவர் அமரகவி பாரதியார். பாவலர் என்ற முறையிலும் பத்திரிகை ஆசிரியர் என்ற முறையிலும் சிலம்பின் ஒளி விளங்கச் செய்த சீரியோர் வரிசையில் அவரும் சிறந்த இடம் பெறுகின்றார். தமிழ் நாட்டின்

தலை சிறந்த முப்பெருங்கலைஞர்களென அவர் தம் சொற்களில் பலவிடத்தும் குறிப்பிடுபவருள் ஒருவர் இளங்கோ அடிகள். 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்ற மூன்று சொற்களால் முழுதும் பழுதற்ற அம்முத்தமிழ்ப் பாட்டிற்கு அழியாப் பெருமை தேடித்தந்த பெருங்கவிஞர் பாரதியார். தமிழ் நாட்டுமக்களிடையே தமிழ் வளர்ச்சியைப் பரப்ப நினைந்த பாரதியாரே முதன்முதல் திருவள்ளுவர் கம்பர் இளங்கோ ஆகிய முப்பெருங்கவிஞர்களுக்குத் தமிழ் மக்கள் தக்க நினைவுச் சின்னங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார். அவ்வகையில் இளங்கோ அடிகளின் சிறப்பையெல்லாம் எடுத்துக் காட்டிச் சிலம்பின் புகழ் விளங்கச் செய்த பாரதியார் நம் வாழ்த்திற்கும் வணக்கத்திற்கும் உரியர்.

ஐயரவர்கள் பதிப்பிற்குப் பின் சிலப்பதிகாரம் கண்ட ஒரு நல்ல பதிப்பு நாவலர் ந. மு வேங்கடசாமி நாட்டாரவர்கள் பதிப்பேயாகும்[17]. நூல் முழுவதற்கும் உரை கூறும் இப்பதிப்பு ஆராய்ச்சியாளருக்கு மட்டுமன்றித் தமிழ் கற்கப் புகும் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது இதன் தனிப்பெருநலமாகும்.

1939-ஆம் ஆண்டு தமிழன்னைக்கு வாய்த்த இனிய நல்லாண்டாகும். இந்த ஆண்டிலேதான் சிலப்பதிகாரம் முழுவதற்கும் மிகச் சிறந்த ஓர்

ஆங்கில மொழி பெயர்பு வெளி வந்தது. அது வாயிலாக வடமொழி இலக்கியத்திற்கு நிக ராகத் தமிழ் இலக்கியத்தின் பேரும் புகழும் மேல் நாட்டு அறிஞர்களின் உள்ளத்திலெல் லாம் கால் கொண்டன. இப்பதிப்பைச் சிறந்த ஆராய்ச்சி முன்னுரைகளோடும் அரிய அடிக் குறிப்புக்களோடும் பயனுடைய பிற்சேர்க்கை களோடும் வரலாற்றுப் பேராசிரியர் திரு. V. R. இராமசந்திர தீட்சிதர் அவர்கள் வெளி யிட்டார்கள்.[18] இப்பதிப்பைக் கண்ட ஆங்கிலப் பேரறிஞர்கள் 'ஆயிரம் கண்ணோன் அருங் கலச் செப்பு' அனைய தமிழ் இலக்கியப் பொற் பேழை வாய் திறந்ததென்று கருதி, வரம்பிலா மகிழ்வு கொண்டார்கள்; தமிழ்த்தாயும் எல்லை யில்லாப் பூரிப்பெய்தினள்.

சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்திற்கு அண்மையிலே வெளி வந்த ஒரு பதிப்பு, காலஞ் சென்ற தமிழ் நாட்டுப் பேரறிஞர் டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியாரவர்களால் உருவாக்கப் பட்டதாகும். இப்பதிப்புத் தனிச் சிறப்பு ஏதும் உடையதன்று என்பது உண்மைதான். எனி னும், ஆங்கில மோகம் கொண்டு அரசியல் உல கில் கடந்த பல்லாண்டுகளாகப் புகழ் ஈட்டி வந்த வர்களெல்லாம் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி காரணமாகத் தமிழ் இலக்கியங் களின்பால் ஈடுபாடு கொள்ளும் புதுமைப் போக்கிற்கு ஓர் அடையாளமாக அறிஞர் ஆர். கே. எஸ். அவர்களின் இப்பதிப்பு விளங்கு

கிறது. அறிஞர் ஆர். கே. எஸ். அவர்களின் சிலப்பதிகார ஈடுபாடு இப்பதிப்பை வெளியிட்டதோடு அமைந்துவிடவில்லை. சிலம்பின் ஒளி விளக்கும் வகையில் அவர் செய்த ஒரு பெருஞ்செயலையும் இங்கு மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் குறிப்பிடலாம்.

தலைவர் ம. பொ. சி. அவர்கள் தொண்டாலும் தமிழரசுக் கழக இயக்கத்தாரின் பெருமுயற்சியாலும் நாடெங்கும் கூட்டப்பட்டு வந்த சிலப்பதிகார மாநாடுகளில் மக்கள் காட்டிய பேரார்வத்தைப் பின்னணியாகக் கொண்டு அறிஞர் ஆர். கே. எஸ். அவர்கள் பூம்புகாரிலே மூன்று நாட்கள் சிலப்பதிகார மாநாடு நடத்தினார்கள். தமிழ் நாட்டின் தலை சிறந்த பேரறிஞர்களெல்லாம் அதிலே பங்குபெற்றுப் பெருமை கொண்டார்கள். ஆம்! அறிஞர் ஆர். கே. எஸ். பதிப்பைக்காட்டிலும் அவர் செய்த இச்செயலே மிக்க பயனுடையது என்றல் தவருகாது. ஆனல், அறிஞர் ஆர். கே. எஸ். ஆர்வத்துடன் செய்த அம்முயற்சி சிறந்த வகையில் தொடர்ந்து நடைபெறவில்லை. அம்முயற்சிக்கு மீண்டும் புத்துயிரளித்துப் புகழ் கொள்ள வல்லது தமிழரசு இயக்கமே எனத் 'தமிழ் கூறு நல்லுலகம்' மனமார நம்புகிறது. இது இயற்கையும் உண்மையுமாகுமல்லவா?

சிலப்பதிகாரப் பதிப்புக்களுள் சிறந்த தாய் டாக்டர் ஐயரவர்களின் சிலப்பதிகாரப் பதிப்பை நினைந்து மகிழ்வுடன் நன்றி பாராட்

டும் தமிழ் மக்களாகிய நாம் ஐயரவர்கள் சிலப்பதிகாரத்தையும் பிற பழந்தமிழ் நூல்களையும் கண்ணாலும் பார்த்தறியாத காலத்தில் செஞ்சொற்சிலம்பை அவர்கட்குக் காட்டி அதன் அருமையில் ஈடுபட்டு அதைப் பதிப்பிக்குமாறு தூண்டிய சேலம் இராமசாமி முதலியார் அவர்களின் சிறப்பையும் நினைந்து நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இக்கருத்து டாக்டர் ஐயரவர்களே மிகுந்த நன்றியுணர்வுடன் தம் சுய சரிதையில் வரைந்துள்ள வாசகங்களால் வலியுறும். அவை வருமாறு.[19]

* * *

முதல் முதலாக எனக்குச் சேலம் இராமசுவாமி முதலியார் சிலப்பதிகாரம் மூலமும் உரையுமடங்கிய கடிதப் பிரதி ஒன்று கொடுத்தார்.

* * *

அவருடைய (சேலம் இராமசாமி முதலியார் அவர்களுடைய) தூண்டுதல் இராவிட்டால் சிந்தாமணியை நான் அச்சிடுவது எங்கே? சங்க நூல்களின் பெருமையை உணர்ந்து இன்புற்று வெளிப்படுத்தும் முயற்சிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்!........... சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டையும் புத்தக வடிவத்திற் பார்க்க வேண்டுமென்று முதலியார் எவ்வளவோ ஆவலோடிருந்தார்.

* * *

சேலம் இராமசாமி முதலியார் அவர்கள் பெருந் தூண்டுதலால் டாக்டர் ஐயர் அவர்கள் சிலப்

பதிகாரத்தைச் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்டதும் தமிழ் ஆராய்ச்சி அறிஞர்களின் கண்கள் வியப்பால் அகன்றன. அவர்களுள் தலை சிறந்தவர், ஈழ நாட்டுப் பேரறிஞர் திரு. கனகசபைப் பிள்ளை அவர்களே. '1800 ஆண்டுகட்கு முன் தமிழர்' பற்றி அப்பெரியார் 1900-ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட நூல் பழந்தமிழர் பெருமையைக் குன்றின் மேல் இட்ட விளக்காக்கிற்று.[20]

சிலப்பதிகார வெளியீடு தமிழக வரலாற்றிற்குப் பெருந்துணை புரிந்த உண்மை திரு. கனகசபைப் பிள்ளை அவர்களின் ஆங்கில நூலால் விளங்குவது போன்றே மகாவித்துவான் திரு. மு. இராகவையங்கார் அவர்களின் 'சேரன் செங்குட்டுவன்'[21] என்ற தமிழ் நூலாலும் இனிது புலனாகும்.

இளங்கோ படைத்த இலக்கியம் பழந்தமிழ் இசை பற்றிய உண்மைகளின் கருவூலம். அந்த உண்மையை உலகறியச் செய்த பெருமை தவத்திரு விபுலானந்த அடிகளாரின் தனியுரிமை. சிலப்பதிகாரத்தோடு சேர்த்து வைத்துப் போற்றி வழிபட்டுப் பயன் கொள்ளத்தக்க ஒரு நூல்—சிலப்பதிகாரத் தொடர்புடைய ஆராய்ச்சி நூல்—விபுலானந்தர் பெருமான் 1947-ஆம் ஆண்டில் வெளியிட்டருளிய 'யாழ் நூல்' ஆகும். அப்பெருநூலின் பாயிரவியலில் விபுலானந்த அடிகளார் தம் சிலப்பதிகார ஈடு

பாடு பற்றிக் குறித்துள்ள கருத்துக்கள் சில வருமாறு:

* * *

'வையமென்னை இகழவும் மாசெனக்கெய் தவும்' இவ்வாராய்ச்சியினை யான் எழுதத் துணிந்தது, 'பொய்யில் காட்சிப் புலமையினோ' ராகிய இளங்கோவடிகள் தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளுக்கு அணியாகப் புனைந்தளித்த தெய்வமாக் கவியாகிய சிலப்பதிகாரத்தின் மாட்சியினை என்னால் இயன்றவரை உலகிற்குத் தெரிவிக்கும் பெருவிருப்பினாலேயாம்............ தமிழ் நாடு செய்த தவப்பயனாகத் தோன்றிச் சங்கநூற் செல்வத்தைத் தமிழுலகிற் கீந்த அறிவுக் கொடைப் பெருவள்ளலும், பெரும் பேராசிரியர், தென்னாட்டுக் கலைச் செல்வர், எழுத்தறி புலவர் என்னும் சிறப்புப் பெயர் களுக்குச் சிறப்பளித்த பெரும்புலவருமாகிய சாமிநாதையர் அவர்கள் சிலப்பதிகாரத்தினை முதல்முறையாக அச்சிட்டது 1892-ஆம் ஆண்டி லாகும். அந்த ஆண்டிலே யானும் பிறந்தே னதலினாலே, பள்ளியிற்படிக்கும் காலத்திலே, மூத்தோர் கையிலே அந்நூற்பிரதி யிருக்கக் காண்பதும், என் கையினாலே அதனைத் தீண்டு வதும் எனக்குப் பேருவகையினைத் தரும் செயல் களாக இருந்தன.

"அஃதன்றியும் ஈழநாட்டின் குணபாலிலே, என் முன்னோர்க்கு உறைவிடமாகிய காரேறு தீவிலே, கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்

னன் வழி வந்த மன்னர்களாலே நிறுவப்பட்ட பழமையான கண்ணகியார் கோயில் ஒன்று உளது. அதன் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் மீதுள்ள ஆர்வம் பெருகியது.

"கொழும்பு மாநகரிற் கல்வி கற்கும் காலத்திலே, இலங்கையரசினராலே பெருமதிப்புப் பெற்ற கலைச் செல்வராகிய கைலாசப்பிள்ளை முதலியார் அவர்களைச் சந்தித்துச் சிலப்பதிகாரத்தைப் பாடங் கேட்கும் பேற்றினைப் பெற்றேன். பரம்பரைக் கலைவாணர் குலத்திலேயுதித்த முதலியாரவர்கள் பழைய இசைமரபு தவறாது கம்பீரமான குரலிலே மங்கல வாழ்த்துப் பாடலினைப் பாடக் கேட்டது இன்னும் என் அகச் செவியிலே ஒலித்துக்கொண்டிருக்கிறது."[22]

* * *

விபுலானந்தர் 'யாழ் நூல்' ஈடு இணையற்றது. அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பேரறிஞர் உயர்திரு. சு. வெள்ளைவாரணனார் அவர்களும், குடந்தை இசையறிஞர் ப. சுந்தரேசன் அவர்களும், அண்மையில் 'சிலப்பதிகார இசை நுணுக்கம்' என்ற நூலை வெளியிட்ட திரு. எஸ். இராமநாதன் அவர்களும் ஆற்றி வருந் தொண்டு தமிழ் மக்களால் போற்றிப் பெருமைப்படுதற்குரியது.

சிலப்பதிகார இலக்கிய நயம் தமிழ் மக்களின் இதயத்தில் சிறப்பிடம் பெறக் காரண

மாய் இருந்த சான்றோர் பேராசிரியர்— டாக்டர் சேதுப்பிள்ளை அவர்களே.[23] 'சிலப்பதிகார நூல் நயம்' என்ற தலைப்பில் செந்தமிழ் மணங் கமழ அவர்கள் எழுதிய நூலே முதன்முதலாக சிலம்புச் செல்வத்தைச் சீரிய முறையில் நாட்டு மக்கள் அனைவர்க்கும் நன்கு அறிமுகப்படுத்தியது. நூலெழுதிய முயற்சியோடு நில்லாது பட்டி தொட்டிகளில் எல்லாம் தம் சொல்லின் செல்வத்தில் சிலம்புச் செல்வத்தையும் சேர்த்து வழங்கிய பெரியவரும் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களே. சிலப்பதிகார இலக்கியம் செந்தமிழ் நாட்டின் வாழ்விற்குரிய இயக்கமாகவே இன்று மலர்ச்சி பெற்றுள்ளது என்றால் அதற்கு ஆதிமூலமாய் விளங்கியவர்கள் நம் அருமைப் பேராசிரியர் அவர்களே.

'சிலப்பதிகார நூல் நயத்தை' ஒட்டிச் சிலப்பதிகார இன்பத்தைத் தமிழர்க்கு மறுமலர்ச்சி நடையில் வழங்க எழுந்த சிறந்த நூல் திரு. சுத்தானந்த பாரதியார் அவர்களின் 'சிலம்புச் செல்வம்.'[24] இலக்கிய ஆராய்ச்சி நோக்குடன் சிலப்பதிகாரம் பற்றி எழுந்த மூன்று சிறந்த நூல்கள் பேராசிரியர் அவ்வை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்களின் 'சிலப்பதிகார ஆராய்ச்சி'யும், திரு. மார்க்கபந்து சர்மா அவர்கள் 'சிலப்பதிகார ரசனை'யும், திரு. ம. ரா. போ. குருசாமி அவர்களின் 'சிலப்பதிகாரச் செய்தி'யுமாகும். இம்மூன்று நூல்களும் ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்புப் பெற்று

விளங்கும் பேறு பெற்றுள்ளன. பொது வகையில் சிலப்பதிகாரத்தை ஆராயாமல் அக்காவியத்தின் தலை சிறந்த பாத்திரங்களை நுணுகி ஆராயும் முறையில் டாக்டர் மு வ. அவர்களால் எழுதப்பெற்றுள்ள 'கண்ணகி', 'மாதவி' ஆகிய இரு நூல்களும் இன்றைய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி பெற்ற சிறந்த பரிசுகள். அவ்வாறே டாக்டர் மு.வ. அவர்கள் யாத்துள்ள 'இளங்கோ' நாடகம் தமிழ் இனத்திற்கு மொழிப்பற்றையும் நாட்டுப் பற்றையும் ஒற்றுமை உணர்வையும் ஊட்டி வாழ்விக்க வல்லதாகும். அந்நாடகத்தால் இளங்கோ அடிகளின் உள்ளத்து உயர்வெல்லாம் புலனாகும்.

பேராசிரியர்கள் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் திரு. ம. இராச மாணிக்கனார், தமிழறிஞர் திரு. ஆ. சிவலிங்கனார், திரு. சங்குப் புலவர், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ சிவஞானம், பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரையார், திரு எம். சண்முகம் பிள்ளை, பேராசிரியர் திரு. அ. சீனிவாசராகவன், திரு. ஜீவ பந்து பால், பேராசிரியர் திரு கே. சி. வன்மீக நாதன், பேராசிரியை திரு. அ. ரா. இந்திரா முதலியோர் அவ்வப்போது வெளியிட்டு வரும் தம் அரிய கட்டுரைகளாலும் நூல்களாலும் முத்தமிழ்க் காப்பியத்திற்குச் செய்து வரும் தொண்டைத் தமிழ் மக்கள் நன்றி உணர்ச்சியுடன் நாளும் போற்றுதல் திண்ணம்.

சிலப்பதிகாரம் சிறந்த நாடகக் காப்பியம். ஆயினும், அப்பேரிலக்கியம் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் போல மேடை நாடகமாகவும் வெள்ளித் திரையாகவும் உருப்பெறுமை நம்மனோர் தவக்குறையே. தெருக் கூத்தாய்ப் பாமர மக்களாலும் 'கண்ணகிக் கூத்து' என்ற பெயரால் போற்றப் பெற்ற வீர பத்தினியின் வரலாறு தமிழ் நாட்டின் தலைசிறந்த கலை நாடகமாகவும் பொலிவு மிக்க வண்ணத் திரைப்படமாகவும் வெளி வரும் நாள் தமிழ்க்குலம் பெருமைப்படத்தக்க பொன்னாளாகும். இத்துறையில் நம் சிந்தனை படர வழி காட்டிய சிறப்பு, திரு டி. கே. எஸ். சகோதரர்களையே சாரும். இளங்கோ அடிகளாகத் திரு. டி. கே. ஷண்முகமும் சேரன் செங்குட்டுவனாகத் திரு டி. கே. பகவதியும் பிறப்பால் அண்ணனும் தம்பியுமாயினும் 'இமயத்தில் நாம்' என்ற நாடகத்தில் தம்பியாகவும் அண்ணனாகவும் மாறித் தோன்றி ஆயிரம் ஆயிரம் கலைக்கண்கட்கு விருந்தளித்து வாழ்வித்த பெருங்கருணையை யாரே மறப்பர்?

தமிழ் நாட்டில் அண்மைக் காலத்தில் 'மலிவுப் பதிப்பு'ப் பருவம் ஏற்பட்டுள்ளதை அனைவரும் அறிவர். அந்தப் பருவக் காலத்தை ஒட்டிச் சிலப்பதிகார மழையும் பெய்துள்ளது. சிலப்பதிகார மூலமும் தெளிவான உரையும் கொண்ட ஒரு பதிப்பு, திரு. புலியூர்க் கேசிகன் தயாரிப்பாக வெளி வந்துள்ளது. 'இரட்டைக் காப்பியங்கள்' என்ற தலைப்பில்

டாக்டர் சுப. மாணிக்கம் அவர்கள் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் மிக அருமையாகப் பதிப்பித்துக் காரைக்குடிச் செல்வி பதிப்பக வெளியீடாக வழங்கியுள்ளார்கள். இரு பெருங் காவியங்களின் மூலம் மட்டுமே இப்பதிப்பில் அடங்கியுள்ளது எனினும், பதிப்புத் தமிழ் மரபினின்றும் சற்றும் பிழையாது மிகவும் பயன் தரத்தக்க முறையில் அமைந்துள்ளது. இப்பதிப்பிற்கு உயிராய் விளங்குவது நூலின் முகப்பில் 'சிலப்பதிகாரத்திறம்' என்ற தலைப்பில் டாக்டர். சுப. மாணிக்கம் அவர்கள் சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் என்னும் உண்மையைத் தம் நுண்மாண் நுழைபுலத்தால் இனிது ஆராய்ந்து வரைந்துள்ள அரிய ஆராய்ச்சிக் கட்டுரையே ஆகும். இப்பதிப்பின் அருமையைக் காண்போர் யாவரும் டாக்டர். சுப. மாணிக்கம் அவர்கள் பழந்தமிழ் இலக்கியங்கள் யாவற்றையும் இவ்வாறே பதிப்பித்து உதவ வேண்டும் என்று விழைதல் இயல்பே.

செந்தமிழ்க் காவியமாம் சிலப்பதிகாரத்தின் புகழ் அலை கடலுக்கும் அப்பால் பரவி, கடல் கடந்த நாடுகளிலும் அடியார்களைப் பெற்றுள்ள அருமை பெருமைக்கு உரியது. பேராசிரியர். வி. ரா. தீட்சிதர் அவர்களின் சிலப்பதிகார ஆங்கில மொழி பெயர்ப்பிற்கு அரியதொரு முன்னுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார் பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர் ஜூலிஸ்பிளாக்கு (Jules Block) என்பவர். இருபது ஆண்டுகட்கு

முன் அப்பேரறிஞர் திரு. தீட்சிதர் அவர்களது சிலப்பதிகார நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பிற்கு அளித்துள்ள முன்னுரையில் அப்பெருமகனார் பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்திக் கூறியுள்ள வாசகங்கள் இன்றும் தமிழ் அறிஞர்களின் சிந்தனைக்கும் செயலுக்கும் உரியன.[25] திரு. ஜூலிஸ் பிளாக்கு அவர்கள் தம் முன்னுரையில் சிலப்பதிகாரத்தை 'அழகிய பாட்டு' என்று போற்றியுள்ள திறம் நம் உள்ளத்தை இன்ப ஊற்றாக்கும்[26]. 'அழகிய பொருள் என்றும் இன்பம் தரும்' என்ற மணிமொழியை உணர்ந்தவர் அல்லரோ அறிஞர் ஜூலிஸ் பிளாக்கு? மேலும், அவர் தம் முன்னுரையில் 1900-ஆம் ஆண்டிலேயே பிரெஞ்சுப் பேரறிஞர் ஜூலிஸ் வின்சன் என்பவர் சிலப்பதிகாரத்தில் வரும் கொலைக்களக் காதையையும், ஆய்ச்சியர் குரவையையும், துன்பமாலையையும் பிரெஞ்சு மொழியில் பெயர்த்துள்ளார் என்றும், சிலப்பதிகாரப் பதிப்பில் டாக்டர் சாமிநாத ஐயர் அக்காவியம் பற்றி வரைந்துள்ள ஆராய்ச்சி முன்னுரையையும் பிரெஞ்சில் மொழி பெயர்த்துள்ளார் என்றும் குறித்திருப்பது நாம் நினைவிற் கொள்ளத் தக்கது.

அண்மையில் அறிஞர். ஏ. எல். பாஷாம் என்பவர் 'வியப்பிற்குரிய இந்தியா' (The wonder that was India—முதல் பதிப்பு 1954, 2-ஆம் பதிப்பு 1956)-என்னும் பெயரில் அரியதொரு

ஆராய்ச்சி நூல் வெளியிட்டுள்ளார். 568 பக்கங்களைக் கொண்ட அப்பெருநூலில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை வாசகராக (Reader) இருக்கும் அப்பெரியார் தமிழ் இலக்கியம் பற்றி 15 பக்கங்களில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார். கருத்து வேறுபாட்டுக்குரிய சில கருத்துக்கள் அக்கட்டுரையில் இருப்பது உண்மையே. எனினும், சிலம்பின் சிறப்புப் பற்றி அவர் ஒன்பது சிறந்த கருத்துக்களைக் குறித்துள்ளார். அவை வருமாறு: (1) தமிழ்ப் பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரமே பழையது; பெரியது. (2) வடமொழிக் காவியங்கட்கும் இதற்கும் மிகுந்த வேற்றுமை இருக்கிறது. (3) கற்றவர்கட்காகச் செந்தமிழில் வரையப் பெற்றதேனும், இக்காவியம் மக்கள் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையது. (4) வருந்தற்குரிய சூழ் நிலையில் சிக்கிய இரு சாதாரண மக்களின் வாழ்வைக் கூறும் இக்காப்பியம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது உண்மை வாழ்க்கையின் விளக்கம். (5) வடமொழிக் காப்பியங்கள் போலன்றி, சிலப்பதிகாரம் உண்மையான அவலச் சுவை உடையதாய் உள்ளது. (6) தமிழ் மக்களால் இக்காப்பியம் தேசியக் காப்பியமாகக் கருதப்படல் சரியே. (7) காப்பியத்தின் கொடு முடியாய் விளங்கும் ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சின மாலை, அழற்படு காதை முதலிய பகுதிகள்— இந்திய இலக்கியத்